# மனம்போல வாழ்வு.

6

இஃது

ஸ்ரீ ஜேம்ஸ் எலன்

என்பவர்

ஆங்கில

பாஷையிலாக்கியுள்ள

## "AS A MAN THINKETH"

என்னும்

நூலின்

தமிழ் மொழி பெயர்ப்பு.

இது

ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளை

அவர்களால்

செய்யப் பெற்று

ஸ்வாமி வள்ளிநாயகத்தால்

வெளியிடப் பெற்றது.


முதற் பதிப்பு—2000

சென்னை:

அஷ்ட லக்ஷ்மீ விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1909.


---

இதன் விலை அணா 8.


Copyright Registered.

ஆக்கல் திருத்தல் அமைப்பவன் மனனே ;
மனிதன் மனனே ; மற்றவன் நினைப்பாங்
கருவியை யெடுத்துக் கருதிய திருத்தி
யாயிர மின்புதுன் பாக்கிக் கொள்ளுவன் ;
தனித்து நினைப்பான் சாருமஃ துடனே ;
சந்தர்ப் பமும்மவன் றனைக்காட் டாடியே.

இதன் காயிதம், அச்சு, கட்டடம்
யாவும் சுதேசியம்,

2 Sivamayam

P. V.

Bogale. 3482

# மனம்போல் வாழ்வு.

# விஷய சூசிகை.


பக்கம்.

1 ஸமர்ப்பணம் ... ... ... 3

2 நூன் முகம் ... ... ... 4

3 முதனூலைப்பற்றிய சில அபிப்பிராயங்கள் ... 7

4 நினைப்பும் ஒழுக்கமும் ... ... 9

5 சந்தர்ப்பங்களிடத்து நினைப்பின் செயல் ... 14

6 சரீரத்தினும் ஆரோக்கியத்தினும் நினைப்பின் சக்தி ... ... ... 33

7 நினைப்பும் காரியமும் ... ... 38

8 நினைப்பும் காரியசித்தியும் ... ... 43

9 மனக்காட்சிகளும் மனோஇலக்ஷியங்களும் ... 49

10 சாந்தம் ... ... ... ... 57

# ஸமர்ப்பணம்.

நமது பாரத மாதா உன்னத நிலையை அடையுமாறு—நமது தேசத்தவர்களாகிய சகோதரர்கள் அறிவு, ஒழுக்கம், செல்வம், ஐக்கியம்-இவற்றில் மேம்பாடு அடைதற்கு—தம்மால் இயன்றவரை உழைத்தவர், உழைக்கிறவர், உழைப்பவர் ஆகிய சுதேச, பரதேச சகோதரர்களின் திவ்விய பாதாரவிந்தங்களில் இந்நூலை ஸமர்ப்பிக்கின்றனன்.

கர்த்தா.

# நூன்முகம்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." என்னும்

திருவள்ளுவரது திருக்குறளின் பொருளை விரித்து உரைத்தனரோ என்று ஐயுறுமாறு இந்நூலின் முதனூலை ஆங்கில பாஷையில் ஆக்கியருளிய ஸ்ரீ. ஜேம்ஸ் எலன் என்னும் ஆங்கில பண்டிதர்——அறிவின் பண்டிதர் எனினும் அமையும்——தம் நூற்கு "மனிதன் நினைப்பது போல இருக்கிறான்," அஃதாவது, "நினைப்புப் போல வாழ்வு" என்று பொருள்படும் பெயரினை இட்டனர். அதன் மொழி பெயர்ப்பாகிய இந்நூற்கு "மனம்போலவாழ்வு" என்ற பெயரினைத் தந்ததன் காரணம் என்னையோ எனின், நினைப்பு குணமாகவும் மனம் குணியாகவும் இருத்தலின் ஒற்றுமைபற்றி நினைப்பெனினும் மனமெனினும் ஒக்கும் எனக் கொண்டனராதலானும், நமது முன்னோர்கள் குணியைச் சிறப்பித்து "மனம்போல வாழ்வு" என்று கூறினராதலானுமென்க.

இந்நூலின் முதனூலாசிரியர் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றன் பயன்களையும் அடைதற்குரிய மார்க்கங்களைக் கூறியுள்ள பெருமையை இது படிப்பவர் பிரத்தியக்ஷத்திற் காண்பராதலின், நான் கூறல் மிகை. இந்நாள்வரை நான் வாசித்துள்ள எந்நூலினும் இந்நூலிற் போன்று அரிய பொருள்களை எளிதில் உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகத்தக்க விதத்திற்

கூறியிருக்கக் கண்டிலேன். அதுவே இம்மொழிபெயர்ப்புக்குக் காரணம்.

இது முதனூற்குச் சற்றேறக்குறையச் சரியான மொழி பெயர்ப்பு. முதனூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள கவிகள் எத்தனை அடிகளைக் கொண்டுளவோ அத்தனை யடிகளில் தமிழ்க் கவிகள் அமைத்துளேன். மற்ற வாசக மேற்கோள்கட்கு மேற்கோட்கு உரிய அடையாளம் இட்டிருக்கிறேன். ஆயினும் சில இடங்களில் முதனூலாசிரியரது கருத்தினை நன்கு விளக்குதற் பொருட்டுச் சிற்சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்த்திருக்கிறேன். அன்றியும், இந்நூலின் அரிய பொருள்களைத் தமிழுலகம் முழுதும் கற்றும், கேட்டும்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

என்றபடி, நன்குணர்ந்து கைக்கொண்டொழுகல் வேண்டுமென்ற பிரார்த்தனையே என் மனத்தின்கண் முற்பட்டு நின்றமையின், சாதாரணப் பழக்கத்தில் இருக்கும் வடமொழிகளை இதனில் மிகுதியாகவே உபயோகித்துள்ளேன். இவ்விரண்டின் பொருட்டும் அறிவுடையார் என்னை மன்னிப்பாராக.

இந்நூலை மொழிபெயர்க்கவேண்டும் என்ற விருப்பம் என் மனத்தில் வெகுநாளாக இருந்துளதேனும், அது நிறைவேற வாய்த்த சமயத்தை நோக்குங்கால், எல்லாம் வல்ல ஜகதீசன் அருளை நினைந்து உருகும்படி இருக்கின்றது. இராஜ நிந்தனை

முதலான குற்றங்கள் நான் செய்தேன் என்று ஜீவ பரியந்தம் நாடுகடத்தும்படி விதிக்கப்பெற்று, இவ்விடத்து ஸென்ற்ரல் ஜெயிலில் இருப்பதும், தற்பொழுது ஹைகோர்ட்டு உத்தரவின் பிரகாரம், அப்பீல் முடிவுவரை, என்னை வேலைசெய்வதில் நின்றும் நீக்கி, வெறுங்காவலில் வைத்திருப்பதும், அநேகர் தெரிந்திருக்கலாம். உயிர்களுக்கு உதவுதலே ஈசனை ஆராதித்தல் என்னும் கொள்கையுடைய எனக்கு இங்ஙனம் கிடைத்த அவகாசம் எனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள அவன் அருளால் உண்டான நல்ல தருணமாகத் தோன்றிற்று. ஆதலின், அச்சமயத்தை இந்நூல் மொழிபெயர்ப்பதிலும், திருக்குறளின் முதற் பாகமாகிய அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதிலும் உபயோகப்படுத்தித் திருப்தி அடைந்தேன்.

இவ்விடத்து ஸென்ற்ரல் ஜெயில் சூப்பிரண்டெண்டு, மிஸ்டர். இ. ஹெச். காட்ஸ்டென் (E. H. Gadsden) துரையவர்கள், நான் இந்நூலை மொழிபெயர்ப்பதற்குத் தம்மால் இயன்ற எல்லா சௌகரியங்களும் செய்து தந்தமையின், அன்னார்க்கு மிகவும் நன்றியறிதல் உள்ளவனாக இருக்கிறேன்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது." அன்றோ?

கோயம்புத்தூர்
1—10—08.

வ. உ. சிதம்பரம்.

# மூதனூலைப்பற்றிய சில அபிப்பிராயங்கள்.

"இந்நூல் சுயஞானம் சுரக்கும் ஓர் ஊற்று."— லீஸெஸ்டர் பயோனீர்.

"இது நீங்கள் எல்லாரும் படிக்கவேண்டியதான ஒரு புஸ்தகம்."— நார்தர்ண் வீக்லி.

"இச்சிறு புஸ்தகம் உண்மையில் ஜீவதத்துவ சாஸ்திரங்களின் ஆபரணங்களுள் ஒன்றாக இருக்கின்றது. நீங்கள் உதவிபுரிய விரும்பும் உங்கள் சிநேகிதர்கட்கு அளிப்பதற்கு இதைப்பார்க்கினும் நல்ல புஸ்தகம் நமக்குக் கூற இயலாது."—ஸைன்ஸ் ஆப் லைப்.

"இப்புஸ்தகமும், ஸ்ரீ ஏலன் இயற்றியுள்ள மற்ற நூல்களைப் போன்று, மிக நன்றாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ள ஞானத்தை அதிகமாகக் கொண்டுள்ளது. இதன் ஒவ்வொரு பக்கமும் சாந்தம், சிந்தனை, ஸமயம்-இவை பொருந்தின மனத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. இதன் நடையானது விரைவில் சுயஞானம் சுரக்கச்செய்யத்தக்கதாகவும், ஆறுதல் செய்யத்தக்கதாகவுமுள்ள ஒரு நல்ல கீதத்திற்குச் சமானமாயிருக்கிறது. அது எப்பொழுதும் உண்மையாகவும், இன்பம் கொடுப்பதற்காகவே ஆன்மாவை உருக்குவதாகவும் இருக்கின்றது. "இப்புஸ்தகத்தை வாங்கிப்படியுங்கள்." என்று கூற நாம் ஆசைப்படுகிறோம். இந்நூல் மனிதனது புறத்தினும் அகத்தினுமுள்ள ஓர் இரத்தினம்." — பேய்ஸ்லே டெய்லி எக்ஸ்பிரஸ்.

## காப்பு.

மனம்போல வாழ்வென்று மாநிலத்தின் மிக்கோர்
தினந்தோறுஞ் சொன்மொழியைச் சிந்தித்—தினங்
[கூட்டி
ஆங்கிலத்தில் ஜேம்ஸலன் ஆக்கியநூ லைத்தமிழி
லீங்குரைக்கச் செய்வான் இறை.

## அடக்கம்.

அறிவுமிகு மான்றோ ரவையடக்க மென்றும்
அறிவுதரு மாண்பா லறைவர்—அறிவிற்
சிறியேனு மஃதுரைத்தல் சீரியனுக் காட்டுங்
குறியாகு மென்றயிர்த்தேன் கொண்டு.

## வேண்டல்.

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்வாழ்ந்த
தெய்வப் பொருளே சிறந்தொளிருந்—தெய்வத்
தமிழ்துன்று நாட்டுறையுந் தக்கோர்கா லிந்நூல்
அமிழ்துண்டு செய்க அறம்.

## பயன்.

இந்நூற் பொருளை யினிதுணர்ந்து கைப்பற்றி
யிந்நூற் படியொழுகி னிப்பிறப்பில்—நந்நூலி
னிம்மை மறுமைகளை யெய்திப்பின் வீடடையுஞ்
செம்மைநெறி யாக்குந் திறம்.

# மனம்போல் வாழ்வு.

## நினைப்பும் ஒழுக்கமும்.

"மனம்போல வாழ்வு" என்னும் முதுமொழி மனிதனது ஜீவனை மாத்திரமன்றி அவனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைமையையும் சந்தர்ப்பத்தையும் தழுவி நிற்கின்றது. மனிதன் எதை நினைக்கிறானே அதாக இருக்கிறான்; அவன் ஒழுக்கம் அவனுடைய சகல நினைப்புகளின் தொகுதியாகும்.

மரம் வித்தினின்று உண்டாகிறது; வித்தின்றி மரம் உண்டாயிருத்தல் முடியாது; அதுபோன்று மனிதனது ஒவ்வொரு செய்கையும் அவனுடைய நினைப்பாகும் அந்தரங்க வித்துக்களினின்று உண்டாகிறது; அவைகளின்றி உண்டாயிருத்தல் முடியாது. இவ்வுண்மை மனிதன் மனதாரச் செய்யும் செயல்கட்கும், முன்ஆலோஜனையன்றியும் சுயேச்சையாகவும் உண்டாகும் செயல்கட்கும் சமமாகப் பொருந்தும்.

செய்கை நினைப்பின் மலர்; இன்பதுன்பங்கள் அதன் கனிகள். மனிதன் தன் சொந்த விவசாயத்தின் தித்திப்பும் கசப்புமான பலன்களைச் சேகரித்து வைக்கிறான்.

> மனத்தின் நினைப்பே நமைச்சிருட் டித்தது;
> நினைப்பால் நாமெது? அறுவா யாக்கப்
> பெற்றனம்; மனிதன் நினைப்போ தியதேல்
> வருமே துன்பம் எருதுபின் உருளையா;
> மனிதன் நினைப்புப் புனிதமே யாயின்
> வருமே யின்புதன் நிழலாத் திறமே.

மனிதன் நியதிக்கிரமத்தில் உண்டானவனேயன்றித் தந்திரத்தினுல் ஆக்கப்பட்டவன் அல்லன்; பிரத்தியக்ஷமான ஸ்தூலப்பொருள்கள் அடங்கிய இவ்வுலகத்தின்கண், எவ்விதம் காரணகாரியங்கள் நிச்சயமாகவும் கிரமமாகவும் நிகழ்கின்றனவோ, அவ்விதமே மறைந்துகிடக்கும் நினைப்புலகத்தினும் காரணகாரியங்கள் நிச்சயமாகவும் கிரமமாகவும் நிகழ்கின்றன. மேம்பாடானதும் தெய்வத்தன்மை வாய்ந்ததுமான ஒழுக்கம் கடவுளின் கிருபையாலாவது தற்செயலாயாவது வந்ததன்று; ஆனுல், சரியானபடி நினைப்பதில் இடைவிடாது முயற்சித்து வந்ததன் நேரானபயனுகவும், தெய்வத்தன்மைவாய்ந்த நினைப்புகளோடு நீடித்தகாலமுள்ள பிரியமான பழக்கத்தின் நேரான காரியமாகவும் வந்திருக்கிறது. அங்ஙனமே, கீழானதும் மிருகத்தன்மை பொருந்தியதுமான நடக்கை இழிவான நினைப்புகளை மனத்தில் இடைவிடாது வைத்துக்கொண்டிருப்பதன் பயனுக உண்டாகிறது.

மனிதன் தன்னுலேயே ஆக்கவும் அழிக்கவும் படுகிறுன்; நினைப்பாகிய கருவிச்சாலையிலிருந்து சில சஸ்திரங்களை ஏற்படுத்தி, அவற்றுல் தன்னையே அழித்துக்கொள்கிறுன்; அக்கருவிச்சாலையிலிருந்தே வேறுசில ஆயுதங்களைத் தயாரித்து, அவற்றுல் வலிமை, சந்தோஷம், சாந்தி என்று சொல்லப்படும் இன்பகரமான அரண்மனைகளைத் தனக்காகக் கட்டிக்கொள்கிறுன். மனிதன் நினைப்புகளைச் சரியாகத் தெரிந்தெடுத்து உண்மையாகப் பிரயோகிப்பதனுல் தெய்வத்தின் பூரணத்துவத்துக்கு உயர்கின்றுன்; நினைப்புக

ளைக் கெட்டவழிகளிலும் தப்பான மார்க்கங்களிலும் செலுத்துவதனால் மிருகத்துக்கும் தாழ்ந்த கதிக்குத் தாழ்கின்றான். இந்த அதி உயுர்ச்சியும் அதி தாழ்வுமான இரண்டுபதவிகட்கும் இடையில் எல்லா நிலைகளிலுமுள்ள ஒழுக்கங்கள் இருக்கின்றன; மனிதன் அவ்வொழுக்கங்களையெல்லாம் உண்டுபண்ணக்கூடியவனாகவும் அவைகட்கெல்லாம் எஜமானனாகவும் இருக்கிறான்.

இக்காலத்தில் முன்னிலைக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டுள்ள ஆன்மசம்பந்தமான சிறந்த உண்மைகளுள்—மனிதன் நினைப்புக்கு எஜமானன்; தன் ஒழுக்கத்தைத் திருத்திக்கொள்பவன்; நிலைமை, சந்தர்ப்பம், விதி-இவற்றை ஆக்கி ஒழுங்குசெய்பவன்—என்ற உண்மையினைப்போல சந்தோஷத்தைத் தரத்தக்கதும் தெய்வத்தன்மை பொருந்திய நம்பிக்கையும் உறுதியும் விளைக்கத்தக்கதும் வேறொன்றில்லை.

மனிதன், சக்தி, அறிவு, அன்பு-இவற்றைச் சொரூபமாகக் கொண்டவனாகவும் தனது சொந்த நினைப்புகட்குக் கர்த்தனாகவும் இருக்கிறபடியால், அவன் ஒவ்வொரு ஸ்தானத்துக்குமுரிய திறவுகோலை உடையவனாகவும், தன்னை எப்படிச்செய்துகொள்ள விரும்புகிறானோ, அப்படித் தன்னை மாற்றிச் செய்துதர வல்லதான ஒரு கர்த்திருத்துவத்தைத் தன்னிடத்துக் கொண்டவனாகவும் இருக்கிறான்.

மனிதன் எப்பொழுதும் எஜமானன்; அவன் மிகுதியும் பலஹீனமுற்றுக் கைவிடப்பட்டிருக்கும் நிலைமையிலுங்கூட எஜமானனே; ஆனால், அவன் பலம்

குறைந்தும் தாழ்வடைந்தும் இருக்கிற காலத்தில் குடும்பகாரியத்தைத் தவறுதலாக நடத்திவரும் ஒரு விவேகமற்ற எஜமானனை நிகர்க்கிறான். அவன் எப்பொழுது தன் நிலைமையைப்பற்றிச் சிந்திக்கவும் தனது ஜீவன் எந்த நியதியின்மேல் நிலைத்திருக்கிறது என்பதை ஆவலுடன் விசாரிக்கவும் ஆரம்பிக்கிறானோ, அப்பொழுதுதான் அவன் தனது முயற்சிகளை விவேகத்துடன் செலுத்தி, நற்பயன் அடையும் விதத்தில் தனது நினைப்புகளைச் சீர்திருத்தும் அறிவுடைய எஜமானன் ஆகிறான். அறிந்து எஜமானனாக இருப்பவன் அவனே; மனிதன் அவ்விதம் ஆகுதல், நினைப்பின் நியதிகளைத் தன்னுள் கண்டுபிடிப்பதனால்மாத்திரம் கூடும்; அங்ஙனம் கண்டுபிடித்தலாவது, தன்னைப் பகுத்துப்பார்த்தல், அப்பியசித்தல், அநுபவித்தறிதல்-இவையாகும்.

அதிக ஆழமாகச் சுரங்கம் அறுத்தலாலும், அதிகக் கவனத்துடன் தேடுதலாலும், தங்கமும் வைரமும் கிடைக்கின்றன; மனிதன் தனது ஆன்மாவாகும் சுரங்கத்தின்கண் ஆழமாகத் தோண்டுவானாயின், தனது ஜீவன் சம்பந்தமான ஒவ்வோர் உண்மையினையும் காணக்கூடும்; மனிதன் தனது நினைப்புகள் தன்னிடத்தும் மற்றவரிடத்தும் உண்டுபண்ணும் பலன்களைக் கவனித்தறிந்தும், பொறுமையோடுள்ள அப்பியாசம், விசாரணை-இவற்றால் தனது வாழ்க்கையிடத்தும் சந்தர்ப்பங்களிடத்தும் காரிய காரணங்களைப் பொருத்திப்பார்த்தும், அறிதல், ஞானம், சக்தி-இவையாகும்தன்னைப் பற்றிய அறிவை அடைவதற்கு உபா

யமாகப் பிரதிதினமும் நிகழும் ஒவ்வொரு சிறிய சம்பவத்தையும் விடாமல் தன் முழு அநுபவத்தையும் உபயோகப்படுத்தியும், தனது நினைப்புகளை ஜாக்கிரதையாகக் காத்துத் தன்வசப்படுத்தித் தக்கவழியில் திருப்புவானாயின், தானே தனது ஒழுக்கத்தை ஆக்குபவன், தானே தனது வாழ்க்கையைத் திருத்துபவன், தானே தனது விதியை ஏற்படுத்துபவன் என்பவற்றைத் தவறுதலன்னியில் உருஜுப்படுத்தலாம். "தேடுகிறவன் காண்பான்." "தட்டுகிறவனுக்குக் கதவு திறக்கப்படும்." என்னும் நியதி, இவ்வழியில் நிச்சயமாயிருத்தல் போல், மற்ற எவ்வழியிலும் இல்லை; ஏனெனின், பொறுமை, அப்பியாசம், ஆவலோடு செய்யும் விடாமுயற்சி-இவைகளால்மட்டும் ஞானாலயத்தின் வாயிலுக்குள் மனிதன் பிரவேசிக்கக்கூடும்.

# சந்தர்ப்பங்களிடத்து நினைப் பின் செயல்.

ஒரு மனிதனது மனம் விவேகத்துடன் சாகுபடி செய்யத்தக்க அல்லது காடு அடரும்படி விட்டு விடத்தக்க ஒரு தோட்ட நிலத்துக்குச் சமானமாக இருக்கிறது. ஆனால், அது சாகுபடி செய்யப்பட்டாலும் செய்யப்படவில்லையானாலும் ஏதேனும் ஒரு விளைவைக் கொடுத்துத்தீர வேண்டும், கொடுக்கவே செய்யும். அதில் உபயோகமுள்ள வித்துக்கள் விதைக்கப்படாத பக்ஷத்தில் பயனற்ற களைவித்துக்கள் அதிகமாக விழுந்து களைகளை உற்பத்திசெய்துகொண்டிருக்கும்.

ஒரு தோட்டக்காரன் தனது நிலத்திலுள்ள களைகளை நீக்கித் தனக்குவேண்டும் கனிகளையும் புஷ்பங்களையும் தரத்தக்க மரங்களையும் செடிகளையும் வைத்து வளர்த்தல் போன்று, மனிதன் குற்ற நினைப்புகளும், பயனற்ற நினைப்புகளும், அசுத்த நினைப்புகளுமாகிய களைகளை நீக்கி, குற்றமற்ற, பயனுள்ள, சுத்தமான நினைப்புகளாகிய மலர்களும் கனிகளும் விளையுமாறு தன் மனமாகிய தோட்டத்தைப் பேணிக்கொள்ளலாம். இங்ஙனம் செய்து வருதலினால் மனிதன் தனது ஆன்மாவின் தோட்டக்கார எஜமானன் என்றும், தனது வாழ்க்கையின் அதிகாரி என்றும், சீக்கிரத்திலாவது நாட்கழித்தாவது தெரிந்துகொள்வான். அவன் நினைப்பின் நியதிகளைத் தன்னுட்காண்கிறான் ; அன்றியும், நினைப்பின் சக்திகளும் மனோதத்

துவங்களும், தனது ஒழுக்கம், சந்தர்ப்பம், விதி இவற்றைத் திருத்துவதில் எங்ஙனம் வேலை செய்கின்றன என்பதை நாளுக்குநாள் விர்த்தியாகும் நிச்சயத்தோடு அறிகிறான்.

நினைப்பும் ஒழுக்கமும் ஒன்றே; ஒழுக்கம் நிலைமையின் மூலமாகவும் சந்தர்ப்பத்தின் மூலமாகவும் மட்டும் வெளிப்படுமாதலால், ஒரு மனிதனது புறநிலைமைகள் அவனுடைய அகநிலைமைகட்கு ஒத்தவாறு சம்பந்தப்பட்டிருக்க எப்பொழுதும் காணப்படும். இதனால் ஒரு மனிதனுடைய ஒரு குறிப்பிட்ட சமயத்தின் சந்தர்ப்பங்கள் அவனுடைய எல்லா ஒழுக்கங்களையும் காட்டும் என்று கொள்ளல் கூடாது; ஆனால், அச்சந்தர்ப்பங்கள் அவனுடைய அபிவிர்த்திக்கு அச்சமயத்தில் இன்றியமையாதனவாகக் கூறத்தக்க விதத்தில், அவனுள்ளே இருக்கும் சில முக்கிய நினைப்பின் தத்துவங்களோடு, அவ்வளவு நெருங்கிய சம்பந்தத்தை உடையனவாயிருக்கும்.

ஒவ்வொரு மனிதனும் தனது ஜீவனுடைய நியதிப் பிரகாரமே, தான் இருக்குமிடத்தில் இருக்கிறான்; அவனுடைய ஒழுக்கத்தை எந்த நினைப்புகளால் உண்டாக்கிக்கொண்டானோ, அந்த நினைப்புகள் அவனை அந்த ஸ்தானத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றன. அவன் வாழ்க்கையில் தற்செயல் என்பது கிடையாது; ஆனால் எல்லாம் ஒருபொழுதும் பிசகாத நியதி ஒன்றின் காரியமாக நடக்கின்றன. இவ்வுண்மை தங்கள் சந்தர்ப்பங்களில் மனத்திருப்தி உடையார்க்கும் அஃதல்லாதார்க்கும் ஒரு தன்மையாகப் பொருந்தும்.

மனிதன் நாளுக்குநாள் வளர்ந்து விர்த்தியாகிற ஜீவனுயிருப்பதால், வளர்தற்பொருட்டும் கற்றுக்கொள்ளும்பொருட்டும், தான் இருக்குமிடத்தில் இருக்கிருன்; ஒரு சந்தர்ப்பம், அவனுக்காகக் கொண்டுள்ள ஆன்ம சம்பந்தமான பாடத்தை அவன் கற்றுக்கொண்டவுடன், தான் நீங்கி, மற்ற சந்தர்ப்பங்கட்கு இடம்கொடுக்கின்றது.

மனிதன் தான் சந்தர்ப்பங்கட்கு உட்பட்டவன் என்று எவ்வளவுகாலம் நம்பிக்கொண்டுஇருக்கிருனே, அவ்வளவுகாலமும் சந்தர்ப்பங்களால் மொத்துண்ணப் படுகிருன்; ஆனல், அவன் எப்பொழுது தான் சிருஷ்டிசெய்யும் ஓர் சக்தி என்றும், சந்தர்ப்பங்கள் உண்டாவதற்குக் காரணமான நிலமும் வித்துக்களுமாகிய தனது அந்தக்கரணத்தைத் தான் அடக்கியாளலாம் என்றும் உணர்கிருனே, அப்பொழுதுதான் தனக்குத் தானே—பாத்தியதையுள்ள—எஜமானன் ஆகிருன்.

தன்னையடக்குதலையும் தன்னைப் பரிசுத்தமாக்குதலையும் சிறிதுகாலமாவது அப்பியசித்துவந்த ஒவ்வொரு மனிதனும் நினைப்பிலிருந்து சந்தர்ப்பங்கள் வளர்கின்றன என்பதைத் தெரிவான்; ஏனெனில், அவன் தனது அகநிலைமைகள் எவ்வளவுக்கு எவ்வளவு மாறுபட்டனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு தனது புறநிலைமைகளும் மாறுபடக் கண்டிருப்பான். மனிதன் தனது ஒழுக்கத்திலுள்ள குற்றங்களை நீக்குதற்காக உண்மையுடன் முயற்சித்து, விரைவாகவும் விசேஷமாகவும் அபிவிர்த்தி அடையுங்கால், ஒன்றன்பின் ஒன்ருகச் சந்தர்ப்பங்களில் பல மாறுதல்களை

விரைவாக அடைகிறான் என்று சொல்லத்தக்க விதத்தில் இவ்விஷயம் அவ்வளவு உண்மையாக இருக்கிறது.

ஆன்மா, எதனைத் தன்னிடத்து அந்தரங்கமாக வைத்திருக்கிறதோ—தான் எதனை மிக நேசிக்கிறதோ, தான் எதற்குப் பயப்படுகிறதோ—அதனைக் கவர்கின்றது; அது ஆவலுடன் ஆசிக்கும் விருப்பங்களின் உன்னத ஸ்தானத்தை அடைகின்றது; அது தனது கண்டிக்கப்படாத ஆசைகளின் தாழ்ந்த ஸ்தானத்தில் வீழ்கின்றது; ஆன்மா தனக்கு உரியவற்றைப் பெறுதற்குச் சந்தர்ப்பங்கள் கருவிகளாக இருக்கின்றன.

மனமாகிய நிலத்தில் விதைத்த அல்லது விழுந்து முளைக்கும்படி விட்ட ஒவ்வொரு நினைப்பாகிய வித்தும், சீக்கிரத்திலாவது காலம் கழித்தாவது, அதற்குரிய செய்கையாகப் புஷ்பித்துப் பின்னர் அதற்குரிய தருணமும் சந்தர்ப்பமுமாகிய கனிகளைக் கொடுக்கிறது. நல்ல நினைப்புகள் நல்ல கனிகளையும், கெட்ட நினைப்புகள் கெட்ட கனிகளையும் தருகின்றன.

சந்தர்ப்பங்களாகிய புறஉலகம் நினைப்பாகிய அக உலகினுக்குத் தக்கபடி தன்னைத் திருத்திக்கொள்கிறது; இன்பமுற்றதும் துன்பமுற்றதுமான சந்தர்ப்பங்கள் இரண்டும் முடிவில் ஒருவனுக்கு நன்மை பயக்கும் கருவிகளாக இருக்கின்றன. தனது சொந்த விளைவை அறுப்பவனாக, மனிதனானவன் இன்பதுன்பங்களின் மூலமாய் அறிவை அடைகிறான்.

ஒருவன் தன்னிடத்தில் பிரதானமாக இருக்கும் அந்தரங்க ஆசைகள், பிரார்த்தனைகள், நினைப்புகள்-

இவைகளைப்—பரிசுத்தம் இல்லாத எண்ணங்களாகும் கானல் ஜலத்தையோ, பலமும் உயர்வும் பொருந்திய தான எத்தனமாகும் இராஜபாட்டையையோ—பின் பற்றிச் சென்று, முடிவில் அவற்றின் பலங்களையும் நிறைவேறுதல்களையும் தனது புற நிலைமைகளில் அடைகிறான். வளர்ச்சிக்கும் திருத்தத்திற்கும் உரிய நியதிகள் எவ்விடத்தும் உள்ளன.

ஒருவன் கள்ளுக்கடைக்கோ சிறைச்சாலைக்கோ செல்வது ஊழின் அல்லது சந்தர்ப்பத்தின் கொடுமையால் அல்ல; ஆனால், இழிவான நினைப்புகளுடையவும் கீழான ஆசைகளுடையவும் வழியாக அவ்விடங்கட்குச் செல்கிறான். பரிசுத்த மனத்தையுடைய ஒருவன் குற்றத்திற்கு ஆளாவதும் அவனுக்குப் புறமேயுள்ள எச்சக்தியின் வலியாலும் அன்று; ஆனால், குற்றநினைப்பு நீடித்தகாலம் அவனது மனத்தில் அந்தரங்கமாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது; நல்ல தருணம் அந்நினைப்பின் மொத்த சக்தியை வெளிப்படுத்தினது. சந்தர்ப்பம் மனிதனை உண்டுபண்ணுவதில்லை; அது அவனையே அவனுக்குத் தெரிவிக்கின்றது. தீய ஒழுக்கத்தில் இறங்கல், அதன் பலனாகிய துன்பத்தை அநுபவித்தல் என்று சொல்லப்படும் நிலைமைகள் தீய ஆசைகள் இன்றியும், நல் ஒழுக்கத்தில் ஏறுதல், அதன் பலனாகிய கலப்பற்ற இன்பம் அநுபவித்தல் என்று சொல்லப்படும் நிலைமைகள் நல்லொழுக்கத்திற்குரிய விருப்பங்களில் தொடர்ச்சியான பழக்கம் இன்றியும், இருக்கமுடியா; ஆதலின், மனிதன் தனது நினைப்புக்குக் கர்த்தாவாகவும் எஜமானனாகவும் இருந்து, தன்னை ஆக்கிக்கொள்கிறவனாவதும் தவிர தனது

புறநிலைமைகளையும் ஆக்கவும் திருத்தவும் செய்கிற வன் ஆகிறான். ஆன்மா பிறக்கும் காலையிலும் அதற்குரிய இடத்தில்தான் பிறக்கிறது ; அது பின்னர் பூமியில் ஸ்தலயாத்திரை செய்யும்பொழுது தான்நடக்கும் ஒவ்வொரு அடியின் மூலமாகவும்-தன்னுடைய சுத்தம், அசுத்தம், பலம், பலஹீனம்-இவற்றின் பிரதிபலிப்புகளாகவும் தன்னையே வெளிப்படுத்துவதாகவும் இருக்கும் சந்தர்ப்பங்களைக் கவர்கின்றது.

மனிதர் தமக்கு வேண்டுவனவற்றைக் கவர்கின்றிலர் ; ஆனால், அவர் எவையாக இருக்கின்றனரோ அவற்றைக் கவர்கின்றனர். அவருக்குச் சிற்சில சமயங்களில் திடீரென்று உண்டாகும் மனப்பிரியங்களும் அவருடைய மனோ இராஜ்ஜியங்களும் பேராசைகளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பின்னடையச் செய்யப்படுகின்றன ; ஆனால், அவரது அந்தரங்கமான நினைப்புகளும் ஆசைகளும் அவைகட்குரிய நல்ல அல்லது கெட்ட உணவுகளால் போஷிக்கப்படுகின்றன. “நாம் கேட்டதைக் கொடுக்கும் தெய்வம்” நம்மிடத்திலேயே இருக்கின்றது ; அது நம்முடைய ஆன்மாதான். மனிதன் தன்னாலேயே விலங்கிடப்படுகிறான் ; நினைப்பும் செயலும் ஊழின் சிறையாளர்—அவை தாழ்ந்தனவாய் இருப்பதினால் சிறைப்படுத்துகின்றன ; சுவாதீனத்தின் தூதர்களும் அவைகளே—அவை மேம்பாடுள்ளனவாய் இருப்பதினால் விடுதலை செய்கின்றன. மனிதன் தான் விரும்புவதையும் பிரார்த்திப்பதையும் பெறுவதில்லை ; ஆனால், அவன் எதனைப் பெறுவதற்கு யோக்கியதை உள்ளவனாக இருக்கிறானோ அதனைப் பெறுகிறான். அவன் வேண்

டுதல்களும் பிரார்த்தனைகளும் அவனது நினைப்புகட்கும் செயல்கட்கும் ஒத்திருக்கும்பொழுது மட்டும் பூர்த்தியையும் நிறைவேறுதலையும் அடைகின்றன.

இவ்வுண்மையினைக்கொண்டு நோக்கும் காலையில், "சந்தர்ப்பங்களுடன் போராடுதல்" என்பதன் பொருள் யாது? அதன் பொருள், மனிதன் தனது புறத்தில் நிகழும் காரியத்திற்குரிய காரணத்தைத் தனது அகத்தில் வளர்த்துக்கொண்டு, அக்காரியத்துடன் போராடுகிறான் என்பதாம். அக்காரணம் தான் தெரிந்து செய்யும் ஒரு தீய ஒழுக்கமாய் இருக்கலாம்; அல்லது தான் தெரிந்துகொள்ளாத ஒரு பலஹீனமாக இருக்கலாம்; ஆனால், அது எதுவாக இருப்பினும், அதனை உடைத்தா யிருப்பவனுடைய முயற்சிகளை உறுதியாகப் பின்னடையச் செய்து, தக்க பரிகாரத்தைத் தேடும்படியாகச் சத்தமிட்டுக் கூறுகின்றது.

மனிதர் தமது நிலைமைகளை அபிவிர்த்தி செய்தற்கு ஆவலுள்ளவராக இருக்கின்றனர்; ஆனால், தம்மை அபிவிர்த்தி செய்துகொள்வதற்கு விருப்பம் அற்றவராக இருக்கின்றனர்; ஆதலின், அவர் எப்பொழுதும் பந்தப்பட்டு இருக்கின்றனர். எவன் வருந்துதற்குப் பின்னடையவில்லையோ, அவன் செய்து முடித்தற்கு முழுமனம் கொண்டிருக்கும் காரியத்தைச் செய்து முடிப்பதில் ஒருபொழுதும் தவறமாட்டான். இவ்வுண்மை இவ்வுலகக் காரியங்கட்கும் மோக்ஷ உலகக் காரியங்கட்கும் சமமாகப் பொருந்தும். பொருள் சம்பாதித்தலையே கருதியுள்ள மனிதனும்கூடத் தன் கருத்தை முற்றுப்பெறச் செய்தற்கு முன்னம்

மிகுந்த மெய்வருத்தமுறத் தயாராக இருத்தல்வேண்டும்; அங்ஙனம் இருக்க, பலம் பொருந்தியதும் நிதானநிலையுடையதுமான ஒரு வாழ்க்கையைப் பெறுதற்கு விரும்பும் ஒருவன் எவ்வளவு அதிகம் துன்பமுறத் தயாராக இருக்கவேண்டும்?

இதோ, கொடிய வறுமையுற்ற ஒரு மனிதன் இருக்கிறான். அவன் தனது புறநிலைமைகளும் வீட்டுச் சௌகரியங்களும் விர்த்தியாக வேண்டுமென்று மிகுந்த ஆவல்கொண்டிருக்கிறான்; அப்படியிருந்தும், அவன் எப்பொழுதும் தன் வேலையைச் செய்தற்குப் பின்னடைகிறான்; அன்றியும், தனக்குச் சம்பளம் போதாது என்ற காரணத்தின்மேல் தனது எஜமானனை ஏமாற்ற எத்தனித்தல் நியாயம் என்றும் எண்ணுகிறான். அத்தகைய மனிதன் மெய்யான செல்வ வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள உண்மைகளின் பிரதம பாடங்களையும் தெரிந்து கொள்ளவில்லை; அவன் தனது வறுமையிலிருந்து நீங்கிக்கொள்வதற்குத் தகுதியற்றவனாக இருப்பது மாத்திர மன்றிச் சோம்பல், வஞ்சனை, ஆண்மையின்மை-இவை சம்பந்தமான நினைப்புகளைச் சதா நினைத்தும், அவைகளுக்குரிய செயல்களைப் புரிந்தும், தனது முந்திய வறுமையைப் பார்க்கிலும் மிகக்கொடியதொரு வறுமை தன்னை வந்து சேரும்படி செய்துகொண்டிருக்கிறான்.

இதோ, மிதமிஞ்சிய உணவினால் நேரிட்டு, நீங்காத் துன்பத்தைக் கொடுக்கும் வியாதிக்கு இரையாக வருந்தும் ஒரு செல்வவான் இருக்கிறான். அவன் அவ்வியாதியினின்று நீங்கிக் கொள்வதற்கு அளவற்ற பணம் செலவழிக்கத் தயாராக இருக்கிறான்; ஆனால்,

அவன் மிதமிஞ்சி உண்ணும் ஆசையை விடமாட்டான். அவன் தன் இயற்கைக்கு மாறுபட்டதும் அதிகச் சத்துள்ளதுமான உணவுகளை உண்பதற்கு எழும் ஆசையைத் திருப்தி செய்துகொள்ளவும் அதோடுகூட தேக ஆரோக்கியத்தை உடைத்தாயிருக்கவும் விரும்புகிறான். அத்தகைய மனிதன் ஆரோக்கியமாக இருத்தற்கு முற்றிலும் அருகன் அல்லன்; ஏனெனின், அவன் ஆரோக்கியமாக வாழ்தற்குரிய பிரதம உண்மைகளை இன்னமும் கற்றுக்கொள்ளவில்லை.

இதோ, கூலியாட்களுக்குக் கிரமமான கூலிகளைக் கொடாதிருத்தற்குப் பல ஒழுங்கற்ற மார்க்கங்களைச் செய்துகொண்டும், பெரிய இலாபத்தை அடையலாம் என்ற நம்பிக்கையுடன் தன்னிடம் வேலைசெய்யும் கூலியாட்களின் கூலிகளைக் குறைத்துக்கொண்டும் வருகிற கூலிவேலைவாங்கும் ஒருவன் இருக்கிறான். அத்தகைய மனிதன் செல்வவான் ஆவதற்குச் சிறிதும் தகுதியுடையவன் அல்லன்; அவன், பின்னர், ஐஸ்வரியம், கீர்த்தி ஆகிய இரண்டினும் தன்னைத் தரித்திரனாகக் காணும்பொழுது, தனது அந்த நிலைமைகட்குத் தானே காரணன் என்பதை உணராது, சந்தர்ப்பங்களைக் குற்றமாகக் கூறுகிறான்.

மனிதன் தனது சந்தர்ப்பங்கட்குத்-அநேகமாக எப்பொழுதும் அவனுக்குத் தெரியாமலே இருந்தபோதிலும்-தானே காரணஸ்தன் என்ற உண்மையினையும், அவன் புறத்தில் ஒரு நல்ல பலனைக் கருதி முயற்சித்து வரும் காலையில் அவனது அகத்தில் அத்தகைய பலனுக்கு எள்ளளவும் பொருத்தமற்ற நினைப்பு

களையும் ஆசைகளையும் தழுவுவதினால், அப்பலன் வந்து அடையாத விதத்தில், இடைவிடாது தடை செய்து கொண்டும் வருகிறான் என்ற உண்மையினையும் விளக்குதற்கு உதாரணமாக இம்மூன்று விஷயங்களையும் கூறியுள்ளேன். இம்மாதிரி விஷயங்கள் எண்ணிறந்தன பெருக்கிப் பல பிரகாரமாகக் கூறலாம்; ஆனால், அது அவசியமன்று. ஏனெனின், இதனைப் படிப்பவர் உறுதியாகத் தீர்மானித்துக் கொள்ளும் பக்ஷத்தில், தமது மனத்திலும் வாழ்க்கையிலும் நினைப்பின் நியதிகளது செயலைக் கண்டுபிடிக்கலாம்; இப்படிச்செய்யும்வரை, தனக்கு வெளியிலுள்ள உண்மைகள்மாத்திரம் ஒருவனுக்கு நியாயபூர்வமான காரணம் ஆகா.

ஒருவனுடைய ஆன்மாவின் எல்லா நிலைமையையும்-அவன் தெரிந்திருந்தபோதிலும்-அவனது வாழ்க்கையின் புறத்தோற்றத்தை மாத்திரம் வைத்து மற்றொருவன் தீர்மானிக்க முடியாதவிதத்தில் சந்தர்ப்பங்கள் அவ்வளவு பின்னலாகவும், நினைப்புகள் அவ்வளவு ஆழ்ந்து வேரூன்றியும், மனிதர்களுள் நிலைமைகள் அவ்வளவு விரிந்த பேதம் உடையனவாகவும், இருக்கின்றன. ஒரு மனிதன் சில விஷயங்களில் யோக்கியதை உள்ளவனாக இருக்கலாம்; அப்படிக்கிருந்தும், அவன் பல கஷ்ட நஷ்டங்களை அநுபவிக்கலாம்: ஒரு மனிதன் சில விஷயங்களில் அயோக்கியதை உள்ளவனாக இருக்கலாம்; அப்படிக்கிருந்தும், அவன் மிகுதியான பணத்தைச் சம்பாதிக்கலாம்: ஆனால், ஒருவன் அவனது குறிப்பிட்ட ஒரு யோக்கியதையினால் கஷ்ட நஷ்டப்படுகிறான் என்றும், மற்றொ

ருவன் அவனது குறிப்பிட்ட ஒரு அயோக்கியதையி ஞல் பணக்காரன் ஆகிருன் என்றும் ஜனங்கள் வழக் கமாகக்கொள்ளும் தீர்மானம், ஒரு விஷயத்தில் அயோ க்கியனாக இருப்பவன் எல்லா விஷயங்களிலும் அயோ க்கியன் என்றும், ஒரு விஷயத்தில் யோக்கியனாக இருப்பவன் எல்லா விஷயங்களிலும் யோக்கியன் என் றும் மேலெழுந்தவாறு கொள்ளும் அபிப்பிராயத் தின் முடிவாக இருக்கிறது. ஆழ்ந்த அறிவு, அதிக விசாலமான அநுபவம்-இவற்றின் முன்னர் இத்த கைய தீர்மானம் பிசகு என்று காணப்படுகிறது. அவ்வயோக்கியதையுள்ள மனிதன் மற்றவனிடத்து இல்லாத சில மெச்சத்தக்க நற்குணங்களை உடையவ ஞக இருக்கலாம்; அந்த யோக்கியதையுள்ள மனிதன் மற்றவனிடத்து இல்லாத சில வெறுக்கத்தக்க தீய ஒழுக்கங்களை உடையவனாக இருக்கலாம். யோக்கி யன் தனது யோக்கியமான நினைப்புகளுடையவும் செயல்களுடையவும் நல்ல பலன்களை அடைகிருன்; அவன் தனது தீய ஒழுக்கங்களால் உண்டாகும் துன் பங்களையும் அநுபவிக்கிருன். இதுபோலவே அயோ க்கியனும் அவனுக்குரிய துன்பங்களையும் இன்பங்க ளையும் சேகரிக்கிருன்.

ஒருவன் தனது நல்லொழுக்கத்தினுல் துன்ப த்தை அடைகிருன் என்று நம்புதல், மனித வீண் பெருமைக்குப் பிரியமாக இருக்கிறது; ஒருவன் தன் மனத்திலிருந்து பலஹீனம், வெறுப்பு-இவை சம்பந் தமான ஒவ்வொரு அசுத்த நினைப்பையும் வேருடன் கல்லித் தனது ஆன்மாவினிடத்திலுள்ள ஒவ்வொரு பாவமலத்தையும் போக்கடிக்கும் கால பரியந்தம்

அவன் தனது துன்பங்கள் நல்ல குணங்களிலிருந்து உண்டாயின என்றும், கெட்ட குணங்களிலிருந்து உண்டாகவில்லை என்றும் தெரியவும் சொல்லவும் கூடிய ஸ்திதியில் இருக்கமுடியாது; அவன் அந்த மேலான பூர்ணத்துவத்துக்குச் செல்லும் மார்க்கத்தில், ஆனால், அவன் அதைச் சேர்தற்குமுன் வெகு தூரத்தில் இருக்கும்பொழுதே, முற்றிலும் நியாயமானதும், ஆதலால், தீமைக்கு நன்மையும் நன்மைக்குத் தீமையும் கொடுக்காததுமான பெரியநியதி தனது மனத்திலும் வாழ்க்கையிலும் நடை பெறுவதைக் கண்டுகொள்வான். அவன் அத்தகைய அறிவை அடைந்தவனாக, தனது சென்றொழிந்த அறியாமையையும் குருட்டுத்தனத்தையும் கண்டு, தனது வாழ்க்கை நியாயமாக விதிக்கப்பட்டிருக்கிறது என்றும், எப்பொழுதும் அப்படியே விதிக்கப்பட்டிருந்தது என்றும், தனது சென்றொழிந்த நன்மை தீமையாகிய சகல அநுபவங்களும் வளர்ந்துகொண்டிருந்த, ஆனால், வளர்ச்சிமுற்றும் பெறாத தனது ஆன்மாவின் வெளிச்செயல்கள் என்றும் நன்கு தெரிந்து கொள்வான்.

நல்ல நினைப்புகளும் நல்ல செயல்களும் ஒரு காலத்தும் கெட்ட பலன்களைக் கொடுக்கமுடியா; கெட்ட நினைப்புகளும் கெட்ட செயல்களும் ஒரு காலத்தும் நல்ல பலன்களைக் கொடுக்கமுடியா. இங்ஙனம் கூறுதல், தானியத்திலிருந்து தானியத்தைத்தவிர மற்றொன்று உண்டாக முடியாது என்றும், முள்செடிகளிலிருந்து முள்செடிகளைத்தவிர மற்றொன்று உண்டாக முடியாது என்றும் கூறுதலேயாகும். மனிதர் இக்

நியதியை ஸ்தூல உலகினில் கண்டு, அதனை அநுசரித்து நடக்கின்றனர்; ஆனால், சூக்ஷ்மமாகிய மனோ உலகத்தின்கண்ணும், ஒழுக்க உலகத்தின்கண்ணும்--அங்கும் இந்நியதி எளிதில் உணரத்தக்கதாகவும் மாறுபடாததாகவும் இருந்தும்--இந்நியதியைக் கண்டுள்ளவர் மிகவும் சிலரே; ஆதலின், மனிதர் அதனை அநுசரித்து நடக்கின்றிலர்.

துன்பம் எப்பொழுதும் எவ்வழியிலாவது சென்ற பிசகான நினைப்பின் காரியம். அத்துன்பம் மனிதன், தன்னுடனும் தன்னைச் சம்பந்தித்த நியதியுடனும் ஒற்றுமையில்லாது இருக்கிறான் என்பதைக் காட்டும் ஓர் அறிகுறியாகும். துன்பம் அநுபவித்தலின் பரம பிரயோஜனம் மனிதனைப் பரிசுத்தப்படுத்தலும், அவனிடத்துள்ள பிரயோஜனமற்றதும் அசுத்தமுள்ளதுமான எல்லாவற்றையும் எரித்து நாசமாக்கலுமாம். எவன் பரிசுத்தனாக இருக்கிறானோ, அவனுக்குத் துன்பம் என்பதே கிடையாது. களிம்பு நீங்கியபின்னர் தங்கத்தைப் புடத்தில் வைத்துச் சுடுதற்கு யாதொரு காரணமும் இருக்கமுடியாது; அதுபோலவே பூரண பரிசுத்தத்தையும் தெளிவையும் அடைந்தபின்னர் மனிதன் துன்பத்தையடைய யாதொரு காரணமும் இல்லை.

ஒரு மனிதனுக்குத் துன்பத்தைத் தரும் சந்தர்ப்பங்கள் அவனது மனத்தின்கண் உள்ள ஒற்றுமைக் கேட்டின் பலன்கள்; ஒருவனுக்கு இன்பத்தைத் தரும் சந்தர்ப்பங்கள் அவன் மனத்தின்கண் உள்ள ஒற்றுமையின் பலன்கள். சரியான நினைப்பின் அளவு

கருவி இன்பம் அநுபவித்தல் ஒன்றேயன்றி ஜடஉடைமைகள் அல்ல; பிசகான நினைப்பின் அளவுகருவி துன்பம் அநுபவித்தல் ஒன்றேயன்றி ஜடப்பொருள்கள் இல்லாக் குறையன்று. ஒருவன் ஐஸ்வரியவானாகவும், ஆனால், துன்பமே அநுபவிப்பவனாகவும் இருக்கலாம்; மற்றொருவன் தரித்திரனாகவும், ஆனால், சுகமே அநுபவிப்பவனாகவும் இருக்கலாம். ஐஸ்வரியத்தை விவேகத்துடனும் சரியான வழியிலும் உபயோகப்படுத்தும்போது மட்டும் செல்வமும் சுகமும் சேர்ந்துள்ளன; தரித்திரன் தனது நிலைமை அநியாயமாகத் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கொள்ளும்போதுமட்டும் மிகக்கொடிய துன்பத்தில் ஆழ்கிறான்.

வறுமையும், மிதமிஞ்சி அநுபவித்தலும் துன்பத்தினுடைய இரண்டு அந்தங்கள். இவ்விரண்டும் இயற்கைக்கு விரோதமானவை; அவை மனத்தின் ஒழுங்கின்மையால் உண்டாகின்றன. ஒருவன் சந்தோஷத்தையும், ஆரோக்கியத்தையும், செல்வத்தையும் பெற்றானாகும் வரை சரியான நிலைமையில் வைக்கப்பட்டவனாகான்; சந்தோஷம், ஆரோக்கியம், செல்வம்-இவை, புறநிலைமைகளோடு அகநிலைமைகளும்-சந்தர்ப்பங்களோடு மனிதனும் பொருந்தியிருப்பதன் பயனாக உண்டாகின்றன.

ஒருவன் முணுமுணுத்தலையும் நிந்தித்தலையும் விட்டுத் தனது வாழ்க்கையை ஒழுங்காக நடத்தும் மறைபட்டுள்ள நியதியைக் கண்டுபிடித்தற்கு எப்பொழுது ஆரம்பிக்கிறானோ, அப்பொழுதுதான் அவன்

மனிதனாவதற்கு ஆரம்பிக்கிறான். அவன் அந்த ஒழுங்காக நடத்தும் நியதிக்குத் தக்கபடி தனது மனத்தைச் சரியாக்கிக் கொள்வதனால் தனது நிலைமைக்கு மற்றவர்கள் காரணஸ்தர் எனக் குற்றம் சாட்டலைவிட்டு, மேன்மையும் பலமுமுள்ள நினைப்புகளினால் தன்னை உறுதியாக்கிக்கொள்கிறான்; தவிரவும், சந்தர்ப்பங்களோடு போராடுதலை விட்டு, தான் அதிசீக்கிரமாக அபிவிர்த்தியடைவதற்குத் துணைக்கருவிகளாகவும், தனக்குள் மறைந்துகிடக்கும் சக்திகளையும் அதிர்ஷ்டங்களையும் கண்டுபிடிப்பதற்கு வழிகளாகவும் அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கிறான்.

பிரபஞ்சத்தில் முதன்மையாக இருக்கும் உண்மை நியதியே அன்றிக் குழப்பம் அன்று; வாழ்க்கையின் உயிரும் சாரமும் நியாயமே அன்றி அநியாயம் அன்று; உலகத்தில் ஆன்ம சம்பந்தமான அரசாங்கத்தில் சீர்ப்படுத்தி நடத்திவரும் சக்தி தர்மமே அன்றி அதர்மம் அன்று. இஃது இங்ஙனம் இருப்பதால், பிரபஞ்சம் சரியாக இருக்கிறது என்று காண்பதற்கு மனிதன் தன்னைச் சரிசெய்துகொள்ளமாத்திரம் வேண்டுவதாக இருக்கின்றது. அவன் தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளும்பொழுது, பொருள்களைப் பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் தனது நினைப்புகளை எவ்விதம் மாற்றுகிறானோ, அவ்விதமே பொருள்களும் மற்றவர்களும் தன்னைப்பற்றியும் மாறுதலுறக் காண்பான்.

இவ்வுண்மைக்குச் சாக்ஷியம் ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்கிறது; ஆதலின், கிரமமான அகப்

பார்வையாலும், தன்னைப் பகுத்துப்பார்த்தலாலும் அது மிகஎளிதில் விசாரணை செய்யப்படத்தக்கதாக இருக்கிறது. ஒருவன் தனது நினைப்புகளை அடியோடு மாற்றட்டும்; அது அவனுடைய புறநிலைமைகளில் உண்டுபண்ணும் விரைவான மாறுதல்களைக்கண்டு அவன் ஆச்சரியம் அடைவான். மனிதர் நினைப்பை அந்தரங்கமாக அடக்கிவைத்துக் கொள்ளலாம் எனக் கருதுகின்றனர்; அது முடியாது. நினைப்பு வெகு விரைவில் பழக்கம் ஆகிறது; பழக்கம் சந்தர்ப்பமாகத் தடிக்கின்றது. மிருகத்தனமான நினைப்புகள்-மதுவுண்டல், காமம்-இவற்றின் பழக்கங்களாகத் தடிக்கின்றன; அப்பழக்கங்கள்-வறுமை, வியாதி என்னும் சந்தர்ப்பங்களாகத் தடிக்கின்றன. சகலவித அசுத்த நினைப்புகளும் தளர்ச்சியையும் குழப்பத்தையும் தரும் பழக்கங்கள் ஆகின்றன. அப்பழக்கங்கள் தடுமாறச்செய்வதும் பிரதிகூலமுமான சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. பயமும் சந்தேகமும் உறுதியின்மையுமான நினைப்புகள் பலஹீனமும் ஆண்மையின்மையும் தீர்மானமின்மையுமான பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள்-தவறுதல், வறுமை, அடிமைத்தனம் என்னும் சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. சோம்பலான நினைப்புகள் சுசிகரமற்றவும் யோக்கியமற்றவுமான பழக்கங்களாகத் தடிக்கின்றன; அப்பழக்கங்கள்-அசுத்தத்தன்மை, இரத்தல்-இவற்றிற்குரிய சந்தர்ப்பங்களாக மாறுகின்றன. வெறுத்தல், குற்றம்காணலாகிய நினைப்புகள்-குற்றம்சாட்டுதல், அக்கிரமம் செய்தலான பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள் தீமை, துன்பப்ப

டுத்தலாகிய சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. சகலவித சுயநய நினைப்புகளும் தனக்காகவே உழைத்தற்குரிய பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள், கொஞ்சமாயாவது அதிகமாயாவது, துன்பத்தை உண்டாக்கும் சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. ஆனால், சகலவித நல்ல நினைப்புகளும் அருள், அன்பு என்னும் பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள் மனோகரமும் குதூகலமுமான சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. பரிசுத்தமான நினைப்புகள்-மிதமாக அநுபவித்தல், தன்னையடக்கியாளுதல்-இவற்றிற்குரிய பழக்கங்களாகத் தடிக்கின்றன; அப்பழக்கங்கள்-சாந்தி, சமாதானம்-இவற்றிற்குரிய சந்தர்ப்பங்களாகத் தடிக்கின்றன. தைரியம், தன்னிடத்து நம்பிக்கை, நிதானம்-இவை சம்பந்தமான நினைப்புகள் ஆண்மைக்குரிய பழக்கங்களாக மாறுகின்றன; அப்பழக்கங்கள்-வெற்றி, நிறைவு, சுவாதீனம்-இவற்றிற்குரிய சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. ஊக்கமான நினைப்புகள்-சுத்தம், உழைப்பு என்னும் பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள் இன்பத்தைத்தரும் சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. இனிமை, பொறுமை-இவை சம்பந்தமான நினைப்புகள் அமைதியான பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள்-காப்பாற்றுதல், இரக்ஷித்தல் இவற்றிற்குரிய சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன. அன்பு பாராட்டுதல், சுயநயம் பாராட்டாமை-இவை சம்பந்தமான நினைப்புகள் மற்றவர்க்காகத் தன்னை மறக்கும் பழக்கங்கள் ஆகின்றன; அப்பழக்கங்கள் நிலைப்பும் நிச்சய

ழமான சுகவாழ்வு, மெய்யான ஐஸ்வரியம்-இவற்றிற் குரிய சந்தர்ப்பங்களின் உருக்களை அடைகின்றன.

பிடித்தபிடியாகக்கொண்ட ஒருவித நினைப்பின் தொடர்ச்சி, நல்லதாக இருப்பினும் கெட்டதாக இருப்பினும், அதன் பலனை மனிதனது ஒழுக்கத்திலும் சந்தர்ப்பங்களிலும் காட்டாமல் போகாது. ஒருவன் தனக்கு வேண்டும் சந்தர்ப்பங்களை நேராகப் பெறமுடியாது; ஆனால், நினைப்புகளைத்தெரிந்து, கைக்கொண்டு, அவற்றின் மூலமாய்த் தனக்கு வேண்டும் சந்தர்ப்பங்களை நிச்சயமாக உண்டுபண்ணிக் கொள்ளலாம்.

இயற்கையானது ஒவ்வொரு மனிதனும் மிகுதியாகப் பேணிவருகிற நினைப்புகளைப் பூர்த்திசெய்தற்கு உதவிபுரிகின்றது ; அன்றியும், மனிதனது நல்ல நினைப்புகளையும் கெட்ட நினைப்புகளையும் அதிவிரைவில் வெளிப்படுத்தத்தக்க சந்தர்ப்பங்களையும் தருகின்றது.

ஒருவன் தனது பாவநினைப்புகளிலிருந்து நீங்கிக் கொள்ளட்டும் ; உடனே உலகம் முழுவதும் அவனிடத்துப் பிரியம் உடையதாகி அவனுக்கு உதவிபுரிய முன்வரும். ஒருவன் தனது பலஹீனமும் வியாதியும் பொருந்திய நினைப்புகளைத் தூரத்தில் விட்டுவிடட்டும் ; உடனே அவனது பலமான எண்ணங்களுக்கு உதவிபுரிய எல்லா இடங்களிலும் சந்தர்ப்பங்கள் உற்பவித்துக்கொண்டுவரும். ஒருவன் நல்ல நினைப்புகளைப் பேணிவரட்டும் ; துன்பத்துக்கும் அவமானத்துக்கும் தாழ்த்துகிற துர்அதிர்ஷ்டம் அவனைவிட்டுப் பறந்துபோகும். உலகம் உங்கள் பல நிறங்களைக் காட்டும் கண்ணாடி ; அது நிமிஷம் தோறும் உங்களுக்குக்

காண்பிக்கும் வெவ்வேறு நிறங்கள், சதாகாலமும் அசைந்துகொண்டு இருக்கும் உங்கள் நினைப்புகட்குச் சரியாகச் செய்யப்பட்டுள்ள விசித்திரப்படங்கள்.

எதுவாதற் குன்னிடுவா யெய்தியதா நிற்பாய்
மிதமாந் தவறுதல்கள் மெய்மை—மதியாத
சந்தர்ப்பத் தில்திருப்தி சாரும் சிரித்திடுமெய்
பந்தமுமி லான்மாப் பழித்து.

இடங்கால மென்பவற்றை யெய்தியது வெல்லு
மடங்காணத் தற்செயலை மாய்க்கும்—கொடுங்கோலன்
சந்தர்ப்பத் தைக்கீழே தாழ்த்து மகுடத்தை
வந்துபணி என்னு மறித்து.

அழிவற்ற வான்மாவி னுண்மகவாங் காண
லொழிவுற்ற சத்தியதா யுள்ள—மெழுந்த
விருப்பமஃ தெத்திசைக்கு மேவுவழி யாக்கும்
பெருத்தசுவர்க் கல்லும் பெயர்த்து.

தாமதத்தைக் கண்டு தளர்தலுறு தாவலின்றி
நேமமதைக் காண்பவனு நின்றிடுவாய்—வாம
அறிவெழுந்து நின்றடக்கி யாளுகையிற் றேவர்
குறியெதிர்ந்து நிற்பபணி கொண்டு.

# சரீரத்தினும் ஆரோக்கியத்தினும் நினைப்பின் சக்தி.

சரீரம் மனத்தின் வேலைக்காரன். ஆலோஜனையின் மேல் அல்லது தற்செயலாகக் கொடுக்கப்படும் மனத்தின் கட்டளைகளுக்குச் சரீரம் கீழ்ப்படிந்து நடக்கிறது. அக்கிரமமான நினைப்புகளினால் சரீரம் வியாதியையும் அழிவையும் வெகு விரைவில் பொருந்துகின்றது. அழகும் சந்தோஷமுமான நினைப்புகளினால் சரீரம் யௌவனத்தையும் அழகையும் பெறுகிறது.

வியாதியும் ஆரோக்கியமும் சந்தர்ப்பங்களைப் போல் நினைப்பில் வேரூன்றி இருக்கின்றன. வியாதி நினைப்புகள் தம்மை ஒருவியாதியுள்ள சரீரத்தின் மூலமாக வெளிப்படுத்தும். பயநினைப்புகள் மனிதனை ஒரு பீரங்கிக்குண்டு எவ்வளவு துரிதத்தில் கொல்லுமோ, அவ்வளவு துரிதத்தில் கொல்லக் கண்டிருக்கிறோம். அவை அநேக மனிதர்களைப் பீரங்கிக்குண்டு போன்று நிச்சயமாக, ஆனால், சிறிது தாமதமாக இடைவிடாது கொன்று கொண்டு வருகின்றன. வியாதியின் பயத்தைக் கொண்டிருக்கும் மனிதர்களே வியாதியை அடைகிறவர்கள். மனக்கவலை சரீரமுழுவதையும் அதிசீக்கிரத்தில் ஒழுங்கீனப்படுத்தி வியாதி பிரவேசிப்பதற்குத் திறந்துவைக்கிறது. பரிசுத்தமற்ற நினைப்புகள், சரீரத்தால் மிதமிஞ்சி அநுபவிக்கப்படாவிட்டாலும், சரீரத்தின் நரம்புகட்டைச் சீக்கிரத்தில் கெடுத்துவிடும்.

பலம், பரிசுத்தம், சந்தோஷம்-இவை பொருந்திய நினைப்புகள் சரீரத்துக்குப் பலமும் அழகும் கொடுக்கின்றன. சரீரம் மேன்மையும் விரியத்தக்கதுமான கருவி; அது எந்த நினைப்புகளால் பதியப்பட்டிருக்கிறதோ, அந்த நினைப்புகளுக்குத் தயாராக இணங்குகிறது; பழக்கங்களாக மாறிய நினைப்புகள் அவற்றின் நல்ல அல்லது கெட்ட பலன்களைச் சரீரத்தில் உண்டு பண்ணுகின்றன.

மனிதர்கள் எவ்வளவுகாலம் அசுத்த நினைப்புகளைப் பெருக்கிக்கொண்டு வருகிறார்களோ, அவ்வளவு காலமும் அவர்கள் விஷமும் அசுத்தமும் கலந்த இரக்தத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள். சுத்தமான ஹிருதயத்திலிருந்து சுத்தமான வாழ்க்கையும் சுத்தமான சரீரமும் வருகின்றன. செயல், வாழ்க்கை, தோற்றம்-இவற்றின் ஊற்று நினைப்பு; ஊற்றைச் சுத்தப்படுத்துங்கள்: எல்லாம் சுத்தமாக இருக்கும்.

உணவின் மாற்றம் நினைப்புகளை மாற்றிக்கொள்ளாத மனிதனுக்கு உதவிசெய்யாது. ஒருவன் தனது நினைப்புகளைப் பரிசுத்தமாக்கிக் கொண்டபின்னர் சுத்தமற்ற உணவை விரும்பான்.

சுத்தமான நினைப்புகள் சுத்தமான பழக்கங்களை உண்டுபண்ணுகின்றன. தனது சரீரத்தைக் கழுவிக் கொள்ளாது இருக்கிற மகாத்மா என்பவன் மகாத்மா அல்லன். தனது நினைப்புகளைப் பலப்படுத்திப் பரிசுத்தம் செய்துகொண்டவன் ரோகப்பூச்சிகளுக்குப் பயப்படவேண்டுவது அவசியமின்று.

நீங்கள் உங்கள் சரீரத்தைக் காப்பாற்ற விரும்புவீர்களாயின் உங்கள் மனத்தைப் பாதுகாருங்கள்; உங்கள் கெட்டுப்போன சரீரத்தைத் திரும்பவும் நல்லதாக்கிக்கொள்ள விரும்புவீர்களாயின் உங்கள் மனத்தை நல்லதாக்குங்கள். பகைமை, பொருமை, எதிர்பார்த்தது இழத்தல், ஏக்கம் கொள்ளுதல்-இவை சம்பந்தமான நினைப்புகள் சரீரத்தினின்றும் அதன் ஆரோக்கியத்தையும் அழகையும் பறித்துக்கொள்கின்றன. ஒரு கடுகடுத்தமுகம் தற்செயலாக உண்டானதன்று; அது கடுகடுத்த நினைப்புகளால் செய்யப்பட்டுள்ளது. முகத்தைப் பழுதாக்கும் சுருக்குகள்-மடமை, காமாதிகுணங்கள், கர்வம்-இவற்ருல் உண்டாகின்றன.

ஒரு கன்னிப்பெண்ணின் குற்றமற்ற பிரகாசமுள்ள முகத்தைத் தொண்ணூற்ருறு வயதுள்ள ஒரு மாது உடைத்தாயிருக்க யான் அறிவேன். எனக்கு ஒரு யௌவன புருஷனைத் தெரியும்: அவன் முகம் அவலக்ஷணமான வடிவைக் கொண்டுள்ளது. இவற்றில் ஒன்று பிரகாசமும் இனிமையுமுள்ள மனோவிர்த்தியின் பயனாக உண்டாகி இருக்கிறது; மற்றொன்று காமாதி துர்க்குணத்தையும் அதிருப்தியையுமுடைய மனோவிர்த்தியின் பயனாக உண்டாகி இருக்கிறது.

நீங்கள் உங்கள் அறைக்குள் காற்றும் வெளிச்சமும் ஏராளமாகச் செல்லும்படி விட்டாலன்றி எப்படி ஆரோக்கியமும் இனிமையுமுள்ள வாசஸ்தலத்தைப் பெறமுடியாதோ, அப்படியே மனத்திற்குள்

சந்தோஷம், நல் எண்ணம் அல்லது சாந்தம்-இவற்றோடுகூடிய நினைப்புகளைத் தாராளமாகப் பிரவேசிக்க விட்டாலன்றிப் பலமானசரீரமும், பிரகாசம், சந்தோஷம் அல்லது சாந்தம்-இவை பொருந்திய முகமும் பெறமுடியாது.

வயதுசென்றவர்களது முகங்களில் பச்சாதாபத்தால் உண்டான சுருங்கல்களும், பரிசுத்தமும் தைரியமும் உள்ள நினைப்பால் உண்டான சுருங்கல்களும், காமாதிகளால் உண்டான சுருங்கல்களும் இருக்கின்றன; இவற்றைப் பிரித்து அறியமாட்டாதார்யார்? நல் ஒழுக்கத்தில் வாழ்நாளைக் கழித்தவர்களுக்கு விருத்தாப்பிய திசை அஸ்தமிக்கும் சூரியனைப் போன்று சாந்தம் உள்ளதாயும் சமாதானம் உடையதாயும் மேன்மையால் ஆக்கப்பட்டதாயும் இருக்கிறது. யான் சமீபகாலத்தில் ஒரு தத்துவ ஞானியை அவரது மரணப் படுக்கையில் பார்த்தேன். அவர் வயதில்தவிர மற்றெதினும் விர்த்தாப்பியத்தை அடைந்திருக்கவில்லை. அவர் எவ்வளவு இனிமையாகவும் சமாதானத்துடனும் வாழ்ந்திருந்தாரோ, அவ்வளவு இனிமையாகவும் சமாதானத்துடனும் மரணத்தை அடைந்தார்.

சரீரத்தின் வியாதிகளை நீக்குதற்கு மனோ உற்சாகமுள்ள நினைப்புக்குச் சமானமான வைத்தியன் இல்லை; துக்கத்தையும் கவலையையும் போக்கடிப்பதில் நல் எண்ணத்துக்குச் சமானமாகக் கூறத்தக்க ஆறுதல்செய்பவன் எவனும் இல்லை. ஒருவன், கெட்ட எண்ணம், பரிகசித்து நிந்தித்தல், சந்தேகம், பொறாமை-இவை சம்பந்தமான நினைப்புகளில் இடை

விடாது வாழ்தல் தானே தன்னைச் சிறைப்படுத்திக் கொள்வதாகும். ஆனால், எல்லோரையும் நல்லவராக நினைப்பதும் எல்லோருடனும் உற்சாகமாக இருப்பதும் எல்லோரிடத்தும் உள்ள நன்மையினைக் காண்பதற்கு பொறுமையுடன் அப்பியசிப்பதுமாகிய சுய நயம்கருதா நினைப்புகள் மோக்ஷவீட்டின் வாதலாகும்; நாள்தோறும் ஒவ்வொரு பிராணியோடும் சமாதானமுள்ள நினைப்புகளில் வாழ்ந்துவருதல் அந்நினைப்புகளை உடையார்க்கு அளவற்ற சாந்தியைக் கொடுக்கும்.

# நினைப்பும் காரியமும்.

நினைப்புக் காரியத்துடன் சம்பந்தப்படுத்தப்படும்வரை விவேகமான காரியசித்தியொன்றும் ஆவதில்லை. பெரும்பாலர் வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் நினைப்பாகிய படகை அதன்போக்கில் விட்டுவிடுகின்றனர். இன்ன காரியத்தைச் செய்துமுடித்தல்வேண்டும் என்ற இலக்ஷியம் இல்லாதிருத்தல் ஒரு துர்க்குணமாகும்; தனக்கு அழிவும் ஆபத்தும் வராமல் செய்துகொள்ள விரும்புகிறவன் நினைப்பை இலக்ஷியம் இல்லாமல் விட்டுக்கொண்டிருத்தல் கூடாது.

எவர் தமது வாழ்க்கையில் ஒரு காரியத்தையும் இலக்ஷியமாகக் கொள்ளாதிருக்கின்றனரோ, அவர் பலஹீனத்தின் அறிகுறிகளாகிய சில்லரைத் தொந்தரைகள், பயங்கள், கஷ்டங்கள், தன்னைத்தான் இரங்கல்-இவற்றிற்கு எளிதில் இரையாவர். அப்பலஹீனக் குறிகள் மனதாரச் செய்யும் பாவங்களைப்போல நிச்சயமாக, ஆனல், வேறொரு மார்க்கமாக, தோல்வி, அசந்தோஷம், நஷ்டம்-இவற்றை உறும்படி செய்யும்; ஏனெனின், பலம் வளர்ந்து கொண்டிருக்கும் பிரபஞ்சத்தில் பலஹீனம் எதிர்த்துநிற்க முடியாது.

ஒருவன் ஒரு நியாயமான காரியத்தைத் தன் ஹிருதயத்தில் குறிப்பிட்டுக்கொண்டு, அதனைச் செய்துமுடித்தற்கு முயற்சிக்கவேண்டும். அவன் அக்காரியத்தைத் தனது நினைப்புகளையெல்லாம் இழுக்கும் மத்தியப்பொருளாகச் செய்யவேண்டும். அது அவனுடைய அக்காலத்திய சுபாவத்தின்பிரகாரம்

ஒரு ஆத்மார்த்த இலக்ஷியமாகவோ உலகசம்பந்தமான ஒரு விஷயமாகவோ இருக்கலாம்; ஆனால், அது எதுவாக இருப்பினும் அவனது நினைப்பின் சக்திகளையெல்லாம் திடமாக அதனிடத்தில் ஒருமுகப்படுத்த வேண்டும். அவன் அக்காரியத்தைத் தனது பிரதான கடமையாகக்கொண்டு, அவன் நினைப்புகளைக் கணத்தில் அழிந்துபோகும் மனோவிருப்பம், மனோ இராஜ்ஜியம், மனோபாவனை-இவற்றில் திரியவிடாமல், அதைச் செய்துமுடித்தற்கு முயலவேண்டும். இதுதான் தன்னை அடக்கியாளுதற்கும் நினைப்பின் மெய்யான ஏகாக்கிரத்துக்கும் நல்லவழி. அவன் கருதியுள்ள காரியத்தைச் செய்து முடித்தலில் திரும்பத் திரும்பத் தவறிப்போயினும்—அவனது பலஹீனம் ஒழிபடும்வரை அவன் தவறிப்போக வேண்டுதல் அவசியமாதலால்—அவன் பெறும் ஒழுக்கத்தின் திட்பம் அவனுடைய உண்மையான வெற்றியின் அளவதாக இருக்கும்; இது அவன் எதிர்காலத்தில் அடையும் சக்திக்கும் வெற்றிக்கும் ஓர் புதிய புறப்படும்ஸ்தானமாகும்.

ஒரு பெரிய காரியத்தை விசாரித்தறியத் தயாராக இல்லாதவர் தமது சொந்தவேலை எவ்வளவு அற்பமாகத் தோன்றினும் அதைப் பிசகில்லாமல் செய்துமுடிப்பதில் தமது நினைப்புகளையெல்லாம் செலுத்தவேண்டும். இம்மார்க்கத்தால் மட்டும் நினைப்புகளைச் சேர்த்து ஒருமுகப்படுத்தவும் மனோநிச்சயத்தையும் சக்தியையும் முதிரச்செய்யவும் கூடும்; இவற்றைச் செய்துமுடித்தபின்னர் செய்துமுடிக்க இயலாத காரியம் ஒன்றுமில்லை.

மிக்க பலஹீனமுள்ள ஒருவன் தனது சொந்த பலஹீனத்தைத் தெரிந்தும், பலமானது முயற்சியினுலும் அப்பியாசத்தினுலும் மாத்திரம் விர்த்தியாகக் கூடும் என்ற உண்மையினை நம்பியும், அந்நம்பிக்கையுடன் அப்பொழுதே முயற்சிக்க ஆரம்பித்தும், முயற்சியின்மேல் முயற்சியையும் பொறுமையின்மேல் பொறுமையையும் பலத்தின்மேல் பலத்தையும் சேர்த்து, இடைவிடாது விர்த்தியாகிக்கொண்டேபோய், முடிவில் தெய்வீகமான பலத்தைப் பெறுவான்.

சரீரபலம் இல்லாதவன் ஜாக்கிரதையுடனும் பொறுமையுடனும் சரீரப்பயிற்சி செய்துவருதலினுல் தன்னைப் பலவானுக எப்படிச் செய்துகொள்ளக் கூடுமோ, அப்படியே பலஹீன நினைப்புகளையுடைய மனிதனும் தன்னைச் சரியான நினைப்புகளில் பழக்கிவருதலினுல் தனது நினைப்புகளைப் பலமாக்கிக் கொள்ளக் கூடும்.

ஏதேனும் ஒரு காரியத்தை இலக்ஷியமாகக் கொள்ளாதிருத்தலையும் பலஹீனத்தையும் விட்டுநீங்குதலும், காரியத்தை முன்னிட்டு நினைக்கஆரம்பித்தலும், தவறுதலைக் காரியசித்திக்குரிய வழிகளில் ஒன்ருகக் கொள்பவரும உறுதியாக நினைத்து, பயமின்றி எத்தனித்து, சாமர்த்தியமாகக் காரியத்தைச் செய்து முடிப்பவருமான தீரர்களின் இனத்தில் பிரவேசித்தலாகும்.

ஒருவன் தான் செய்துமுடிக்கவேண்டும் காரியத்தைத் தீர்மானித்துக் கொண்ட பின்னர் அதனைச் செய்துமுடித்தற்குரிய நேரான வழியை—இடதுபக்க

மாவது வலதுபக்கமாவது திரும்பிப்பாராமல்—மனத்தில் குறித்துக்கொள்ளல் வேண்டும். சந்தேகங்களையும் பயங்களையும் நிர்த்தாக்ஷிணியமாக நீக்கிவிட வேண்டும்; அவைகள் முயற்சியின் நேரானவழியைக் கோணலாக்கிப் பிரயோஜனமற்றதாகச் செய்கின்ற அம்சங்கள். சந்தேகம், பயம்-இவற்றோடு கூடிய நினைப்புகள் ஒருகாலத்தும் ஒன்றையும் முற்றுப்பெறச் செய்தனவல்ல, இனிமேல் செய்வனவுமல்ல. அவைகள் எப்பொழுதும் தவறுதலுக்கே நடத்துபவை. சந்தேகமும் பயமும் வந்துசேர்ந்தவுடன் காரியம், ஊக்கம், செயல்வலி, உறுதியான நினைப்புகள்-இவை அழிந்துபோகின்றன.

ஒரு காரியத்தைச் செய்ய எழும் இச்சை நாம் அதனைச் செய்துமுடித்தல் கூடும் என்ற அறிவினின்று வருகின்றது. சந்தேகமும் பயமும் அறிவின் பெரிய விரோதிகள்; அவைகட்கு இடம்கொடுப்பவனும் அவைகளைக் கொல்லாது வைத்திருப்பவனும் தான் செல்லும் வழியில் ஒவ்வொரு அடியிலும் தானே தன்னைத் தடுத்துக்கொள்கிறவன் ஆகிறான்.

சந்தேகத்தையும் பயத்தையும் ஜயித்தவன் தவறுதலையும் ஜயித்தவன் ஆகிறான். அவனுடைய ஒவ்வொரு நினைப்பும் சக்தியைக் கொண்டிருக்கிறது: சகல சங்கடங்களும் தைரியத்துடன் எதிர்க்கப்பட்டு, விவேகத்துடன் ஜயிக்கப்படுகின்றன. அவன் காரியங்கள் தக்க பருவத்தில் நடப்பட்டிருக்கின்றன; அவைகள் புஷ்பித்து, பிஞ்சில் வெம்பி உதிராத கனிகளைக் கொடுக்கின்றன.

காரியத்துடன் நிர்ப்பயமாகச் சேர்க்கப்பட்ட நினைப்பு சிருஷ்டிசெய்யும் ஓர் சக்தி ஆகிறது; எவன் இதனை அறிகிருனே, அவன் அசைந்துகொண்டிருக்கும் நினைப்புகளையும் ஓடிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளையும் கொண்டுள்ள சரீரச்சுமையினைப் பார்க்கிலும் மேன்மையும் பலமுள்ளதுமான பொருளாவதற்குத் தயாராக இருக்கிருன்; எவன் இதனைச் செய்கிருனே, அவன் தனது மனேசக்திகளை அறிவோடும் விவேகத்துடனும் நடத்துகிறவன் ஆகிருன்.

# நினைப்பும் காரியசித்தியும்.

ஒரு மனிதன் செய்துமுடிப்பனவும் செய்யத் தவறுவனவும் அவனது நினைப்பின் நேரான பலன்கள். சமநிலை இழத்தலே முற்றும் அழிதல் எனப் பொருள்படும் விதத்தில் நியாயமாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள பிரபஞ்சத்தில் அவனவன் செய்கைக்கு அவனவன் பொறுப்பாளியாக இருத்தல் ஆவசியகம். ஒரு மனிதனது பலஹீனமும் பலமும், பரிசுத்தமும் பரிசுத்தமின்மையும் அவனுக்குச் சொந்தமானவை; மற்றொருவனுக்குச் சொந்தமல்ல; அவை அவனால் வருவித்துக் கொள்ளப்பட்டவை; மற்றொருவனால் வருவிக்கப்பட்டனவல்ல; அவை அவனால்மட்டும் மாற்றப்படக்கூடும்; மற்றொருவனால் ஒருபோதும் மாற்றப்படமுடியா. அவனது நிலைமையும் அவனுடைய சொந்தமன்றி மற்றொருவனுடையதன்று. அவனது துன்பமும் இன்பமும் அவனுடைய அகத்திலிருந்து வெளிவந்திருக்கின்றன. அவன் எங்ஙனம் நினைக்கிறானோ அங்ஙனம் இருக்கிறான்; அவன் எங்ஙனம் மென்மேலும் நினைத்துவருகிறானோ அங்ஙனம் இருந்துவருகிறான்.

ஒரு பலஹீனன் உதவிசெய்யப்பட விரும்பினாலன்றி ஒரு பலவான் அவனுக்கு உதவிசெய்தல் முடியாது; அப்பொழுதும் பலஹீனன் தானாகப் பலவானாதல் வேண்டும்; அவன் மற்றொருவனிடத்தில் பார்த்து அதிசயப்படும் பலத்தைத் தன் சொந்த முயற்சிகளினால் அடையவேண்டும்: அவனைத் தவிர மற்றொருவனும் அவன் நிலைமையை மாற்றமுடியாது.

மனிதர் "ஒருவன் ஹிம்சிக்கிறவனாக இருக்கிறபடியால் அநேக ஜனங்கள் அடிமைகளாக இருக்கிறார்கள்: நாம் ஹிம்சிக்கிறவனை வெறுப்போம்." என்று நினைப்பதும் பேசுவதும் வழக்கம். ஆனாலும் தற்காலத்தில் சிலருக்குள்—அவர் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருகின்றது—இந்தத் தீர்மானத்தை மாற்றவும், "அநேக ஜனங்கள் அடிமைகளாக இருப்பதால் ஒருவன் ஹிம்சிக்கிறவனாக இருக்கிறான்: நாம் அவ்வடிமைகளை இகழ்வோம்." என்று கூறவும் ஒரு விருப்பம் உண்டாகி இருக்கிறது. உண்மையிலோ, ஹிம்சிப்பவனும் அடிமையும் மடமையில் ஒருவர்க்கொருவர் உதவிபுரிகின்றனர்: அவர் ஒருவரை ஒருவர் துன்பப்படுத்துவதாகத் தோன்றினும் தம்மையே துன்பப்படுத்திக்கொள்கின்றனர். ஒரு பூரண அறிவு ஹிம்சிக்கப்பட்டவனது பலஹீனத்திலும் ஹிம்சிக்கிறவனது தப்புவழியில் செலுத்தப்பட்ட சக்தியிலும் நியதியின் செயலைப் பார்க்கிறது; ஒரு பூரண அன்பு இவ்விரண்டு நிலைமைகளையும் பின்பற்றியிருக்கிற துன்பத்தைப் பார்த்து, ஒன்றையும் குறைகூறாது; ஒரு பூரண இரக்கம் ஹிம்சிக்கிறவன் ஹிம்சிக்கப்படுகிறவன் ஆகிய இருவரையும் மார்போடு அணைத்துக்கொள்கிறது.

எவன் பலஹீனத்தை ஜயித்து, சகல சுயநய நினைப்புகளையும் தூரத்தில் விட்டுவிட்டானோ, அவன் ஹிம்சிக்கிறவனையாவது ஹிம்சிக்கப்படுகிறவனையாவது சேர்ந்தவன் அல்லன். அவன் சுவாதீனமாயிருக்கிறவன்.

ஒருவன் தனது நினைப்புகளை உயர்த்துவதனால் மட்டும் மேன்மை அடையவும் வெற்றி அடையவும் காரியசித்தி பெறவும் கூடும். அவன் தனது நினைப்புகளை மேன்மைப்படுத்த மறப்பதனால் மட்டும் அவன் பலஹீனனாயும் கீழ்மகனாயும் தரித்திரனாயும் இருக்கக் கூடும்.

ஒருவன் லௌகீகக் காரியங்களிலும்கூட ஒரு காரியசித்தி பெறுவதற்குமுன்னம் தனது நினைப்புகளை இழிவும் மிருகத்தன்மையும் பொருந்தின அமித போகத்தினின்றும் உயர்த்தல் வேண்டும். அவன் சித்தி பெறுதற்குத் தனது எல்லா மிருகத்தனத்தையும் சுயநயத்தையும் விட்டுவிடவேண்டுவது அவசியமில்லை; ஆனால், குறைந்தபக்ஷம் அதன் ஒரு பாகத்தையாவது விட்டுவிடவேண்டும். மிருக சுபாவமான மிதமிஞ்சிய போகத்தை முதன்மையான நினைப்பாகக் கொண்டுள்ள ஒருவன் தெளிவாக நினைக்கவும் ஒழுங்காக ஆலோஜிக்கவும் முடியாது; அவன் தன்னில் மறைந்துகிடக்கும் பொக்கிஷங்களைக் காணவும் விர்த்திசெய்யவும் முடியாது; தான் எடுத்த எந்த வேலையிலும் தவறுவான். அவனது நினைப்புகளை ஆண்மையுடன் அடக்குதற்கு ஆரம்பிக்காததால் தனது காரியாதிகளைச் சீர்திருத்தவும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் தக்க ஸ்திதியில் அவன் இல்லை. அவன் சுவாதீனமாகச் செய்யவும் தனித்து நிற்கவும் தகுதியில்லாதவன். அவன் தெரிந்து கைக்கொள்கிற நினைப்புகளாலேயே சக்திகுறைந்தவனாக இருக்கிறான்.

அபிவிர்த்தியாயினும் காரியசித்தியாயினும் கஷ்டப்பட்டாலன்றி உண்டாகாது. ஒருவனுடைய காரியசித்தி அவன் எவ்வளவுக்குத் தனது குழப்பமான காமாதி நினைப்புகளை ஒழித்துத் தனது ஆலோஜனையை வளர்ப்பதிலும் தனது தீர்மானத்தையும் சுயநம்பிக்கையையும் பலப்படுத்துவதிலும் தன் மனத்தைச் செலுத்துகிறானோ, அவ்வளவுக்குக் கைகூடும். அவன் தனது நினைப்புகளை எவ்வளவு அதிகம் உயர்த்துகிறானோ, அவ்வளவு அதிகம் அவன் ஆண்மையுள்ளவனாகவும் எதார்த்தவாதியாகவும் ஒழுக்கமுள்ளவனாகவும் மேம்படுகிறதும் தவிர அவனது காரியாதிகள் அதிகச் சித்தியை அடைகின்றன; அச்சித்திகளும் அதிக இன்பகரமாகவும் நீடித்தும் இருக்கின்றன.

பிரபஞ்சம் பேராசைக் காரனுக்கும் அயோக்கியனுக்கும் தீயஒழுக்கம் உடையவனுக்கும் அநுகூலம் செய்வதுபோல் வெளிப்பார்வையில் தோன்றினும் உண்மையில் அநுகூலம் செய்வதின்று; அது யோக்கியனுக்கும் பெருந்தன்மையாளனுக்கும் நன்மைபுரிபவனுக்கும் உதவிசெய்கிறது. முற்காலங்களின் பெரிய ஆசிரியர் எல்லோரும் இவ்விஷயத்தை வெவ்வேறு விதமாக வெளியிட்டிருக்கிறார்கள். இதனை அறிந்துகொள்தற்கும் மற்றவர்கட்குக் காட்டுதற்கும் மனிதன் தனது நினைப்புகளை உயர்த்தி, நாளுக்கு நாள் அதிக நல்லொழுக்கம் உடையவனாகத் தன்னை ஆக்கிக்கொள்ள இடைவிடாது முயற்சிக்கவேண்டும்.

புத்தி சம்பந்தமான சித்திகள் அறிவைப் பெறுவதில் அல்லது வாழ்க்கையிலும் இயற்கைப் பொரு

ள்களிலும் உள்ள உண்மையையும் அழகையும் தேடிப்பிடிப்பதில் நினைப்பைச் செலுத்துவதன் பயனாக உண்டாகின்றன. அத்தகைய சித்திகள் சில சமயங்களில் வீண்பெருமையோடும் பேராசையோடும் சேர்ந்திருக்கலாம்; ஆனால், அவை அக்குணங்களிலிருந்து வந்தனவல்ல; அவை சுயநயமற்ற பரிசுத்த நினைப்புகளினின்றும் நீடித்த அருமையான முயற்சிகளினின்றும் இயல்பாக உண்டானவை.

ஆன்மசித்திகள் பரிசுத்தமான நோக்கங்களின் பலன்கள். எவன் அடிக்கடி மேன்மையுள்ள நினைப்புகளையும் உயர்ந்த நினைப்புகளையும் மனத்தில் கொண்டு வாழ்கிறானோ, எவன் சுயநயமற்ற பரிசுத்தமுள்ள சகலவற்றிலும் நினைப்பைச் செலுத்துகிறானோ, அவன் சூரியன் உச்சிஸ்தானத்தைச் சேர்வதும் சந்திரன் பூரணவடிவை அடைவதும் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக ஞானத்தையும் ஒழுக்கத்தில் மேன்மையையும் அடைவான்; தவிரவும் சுகமும் செல்வாக்கும் உடைய ஸ்தானத்திற்கும் உயர்வான்.

எவ்வகையான காரியசித்தியும் நினைப்பின் கிரீடமான முயற்சியின் மகுடமாக இருக்கிறது. தன்னையடக்கல், மனோநிச்சயம், பரிசுத்தம், நல்லொழுக்கம், நன்றாகச் செலுத்தப்பட்ட நினைப்பு-இவற்றின் உதவியால் மனிதன் உயர்கிறான்; மிருகத்தனம், மடி, அசுத்தம், தீயொழுக்கம், குழப்பமான நினைப்பு-இவற்றால் மனிதன் தாழ்கிறான்.

ஒரு மனிதன் உலகத்தில் அதிமேலான ஸ்தானத்துக்கும் ஆன்மஉலகத்தில் அதி உன்னத பதவிகளுக்கும்கூட உயர்ந்து, பின்னர் கர்வம், சுயநயம், தீமை-இவை சம்பந்தமான நினைப்புகளுக்கு இடம் கொடுத்து, பலஹீனம், கொடிய துன்பம்-இவை பொருந்திய நிலைக்குத் தாழவும் செய்யலாம்.

சரியான நினைப்பால் பெற்ற வெற்றிகள் ஜாக்கிரதையாகக் காத்துவருதலால் மட்டும் எப்பொழுதும் நிலைகொள்வன. அநேகர்கள் வெற்றிகிடைத்தல் நிச்சயமானவுடன் நழுவிவிடுவதால் விரைவில் திரும்பவும் தவறுதலில் விழுகிறார்கள்.

சகல காரியசித்திகளும்—தொழில்உலகம், புத்தி உலகம், ஆன்ம உலகம்-இவற்றில் எதிலானாலும் சரி—குறித்த வழிகளில் செலுத்தப்படும் நினைப்பின் பயனாகக் கிடைக்கின்றன: தவிரவும் அவை ஒரு நியதியினாலேயே ஆட்சி செய்யப்படுகின்றன. அவையாவும் ஒரே வழியினாலேயே அடையப்படுகின்றன; வித்தியாசம் எல்லாம் அடைகிற பொருளில் தான்.

சிறிது சித்திபெற விரும்புகிறவன் சிறிது கஷ்டப்படல் வேண்டும்; பெரிதும் சித்திபெற விரும்புகிறவன் பெரிதும் கஷ்டப்படல் வேண்டும்; அதி உன்னதமான நிலையை அடைய விரும்புகிறவன் மிகவும் அதிகம் கஷ்டப்படல் வேண்டும்.

# மனக்காட்சிகளும் மனோ இலக்ஷியங்களும்.

மனக்காட்சி காண்பவர் உலகத்தின் இரக்ஷகர் ஆவார். ஸ்தூல உலகம் சூக்ஷ்ம உலகத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல் போன்று மனிதர் இழிவான தொழில்களைச் செய்யும்போதும், பாவங்களையும் கஷ்டங்களையும் அநுபவிக்கும் போதும் மிகச் சிலராயுள்ள மனக்காட்சி காண்பவரது அழகிய காட்சிகளால் போஷிக்கப்படுகின்றனர். மனிதவர்க்கம் மனக்காட்சி காண்பவர்களை மறக்க முடியாது; அது அவர்களுடைய மனோஇலக்ஷியங்களை மங்கிப்போகவும் அழிந்து போகவும் விடமுடியாது; அது அவற்றில் வாழ்கிறது; அது அவைகளை ஒருகாலத்தில் பிரத்தியக்ஷத்தில் காணவும் அறியவும் தக்க உண்மைகள் என அறியும்.

நூலாசிரியர், சிலையாக்குபவர், சித்திரம் எழுதுவோர், கவியாப்பவர், தீர்க்கதரிசி, ஞானி-இவர்களே மறுஉலகத்தைக் கட்டுபவர்கள்—மோக்ஷ உலகத்தின் சிற்பிகள். அவர்கள் வாழ்ந்திருப்பதனால் இவ்வுலகம் அழகாயிருக்கிறது: அவர்கள் இல்லாதபக்ஷத்தில் தொழில்செய்யும் மனிதவர்க்கம் அழிந்துபோம்.

எவன் தன் ஹிருதயத்தில் ஒரு உயர்ந்த இலக்ஷியமாகும் காட்சியைப் பேணிவருகிறானோ, அவன் அதனை ஒரு காலத்தில் பிரத்தியக்ஷத்தில் காண்பான். கோலம்பஸ் என்பவர் மற்றொரு உலகத்தின் காட்சியைத் தன்மனத்தில் பேணிவந்தார்; பின்னர் அத

னைக் கண்டுபிடித்தார்: கோப்பர்நிக்கஸ் என்பவர் பல உலகங்களினுடையவும் பெரியதோர் பிரபஞ்சத்தினுடையவும் காட்சியினைத் தன்மனத்தில் போஷித்து வந்தார்; பின்னர் அதனை வெளியிட்டார்: புத்தர் என்பவர் மாசற்ற அழகும் பூரண சாந்தியும் உள்ள ஒரு மோக்ஷ உலகத்தின் காட்சியினைத் தன்மனத்தில் பார்த்துவந்தார்; முடிவில் அதனுள் பிரவேசித்தார்.

உங்களுள்எழும் காட்சிகளைப் பேணுங்கள்; உங்களது மனோஇலக்ஷியங்களை விடாதேயுங்கள்; உங்கள் ஹிருதயத்தில் உற்சாகத்தைக் கிளப்பும் கீதத்தையும் உங்கள் மனத்தில் தோன்றும் அழகையும் உங்களது சுத்த நினைப்புகளை அலங்கரிக்கும் அன்பினையும் பரிபாலியுங்கள்; ஏனெனின், அவற்றினின்று சகல இன்பநிலைமைகளும் சகல மோக்ஷசாதனங்களும் வளராநிற்கும்; நீங்கள் அவைகளுக்கு உண்மையாகமட்டும் இருந்துவருவீர்களாயின், முடிவில் உங்களது உலகம் அவற்றால் கட்டப்படும்.

அவாவுதல் அடைதற்கே; விரும்புதல் பெறுதற்கே; மனிதனது மிகக் கீழான அவாக்கள் முற்றும் நிறைவேறுதலும், அவனது மிகப்பரிசுத்த விருப்பங்களை பலன்களை அடையாமல் வீண்போதலும் உண்டோ? நியதி அங்ஙனம் அன்று; அத்தகைய நிலைமை ஒருபொழுதும் நேராது: "கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்."

உங்கள் மனத்தில் உயர்ந்த காட்சிகளைக் காணுங்கள்; நீங்கள் எவ்விதக் காட்சிகளை உங்கள் மனத்தில் காண்கிறீர்களோ அவ்விதமே ஆவீர்கள். உங்கள் மனத்தில் தோன்றும் காட்சியே ஒரு காலத்தில் நீங்

 3482

கள் எதுவாக இருக்கப்போகிறீர்களோ அதற்கு ஓர் உறுதிமொழி; உங்களது மனோஇலக்ஷியம் நீங்கள் எதனை முடிவில் வெளியில் காண்பிக்கப்போகிறீர்களோ அதன் தீர்க்கதரிசனம்.

மிகப் பெரியதான காரியசித்தியும் முதலில் சிறிதுகாலத்திற்கு ஒரு மனக்காட்சியாகத்தான் இருந்தது. ஆலமரம் அதன் வித்தில் உறங்குகிறது; பறவை அதன் முட்டைக்குள் காத்திருக்கிறது; ஆன்மாவுக்கு உண்டாகும் மிகமேலான மனக்காட்சியில் விழிப்புண்டாக்கும் ஓர் தேவதூதன் நடமாடுகிறான். மனக்காட்சிகள் உண்மைகளின் வித்துக்கள்.

உங்கள் சந்தர்ப்பங்கள் பொருத்தமில்லாதனவாக இருக்கலாம்; ஆனால், நீங்கள் ஒரு மனோஇலக்ஷியத்தை வைத்துக்கொண்டு அதனை அடைதற்கு முயற்சிக்கமட்டும் செய்வீர்களாயின், உங்கள் சந்தர்ப்பங்கள் நீடித்தகாலம் அங்ஙனம் இருக்கமாட்டா. நீங்கள் உங்களுடைய அகத்தில் வளர்ந்துகொண்டு, புறத்தில் நின்றநிலையில் நிற்றல் முடியாது. இதோ, வறுமையாலும் வேலையாலும் மிகக்கஷ்டப்படுகிற ஒரு பாலியன் இருக்கிறான்; அவன் அசௌக்கியமுள்ள ஒரு தொழில்சாலையில் நீடித்தநேரம் வேலைசெய்கிறான்; அவன் கல்வியும் கற்றிலன்; நாகரீகமான தொழில்களும் தெரிந்திலன். ஆனால், அவன் தனது நிலைமையைப் பார்க்கிலும் அதிக நல்ல நிலைமையினைத் தனது மனத்தினில் கண்டுவருகிறான்; அவன் அறிவு, நாகரீகம், அழகு-இவற்றைப்பற்றி நினைக்கிறான். மனத்தில் ஒருவிதமான வாழ்க்கையை இலக்ஷியம்வைத்து மனத்தால் கட்டுகிறான்; அதிக வியாபகமும் சுதந்

தரமுமுள்ள ஒரு வாழ்க்கையின் காட்சி அவனைப் பிடித்துக்கொண்டிருக்கிறது; அவன் ஆத்திரம் அவனைச் செயலின்கண் தூண்டுகிறது; அவனில் மறைந்து கிடக்கும் பொக்கிஷங்களையும் சக்திகளையும் விர்த்தி செய்வதற்கு அவனுக்குக் கிடைக்கும் சிறிய பொருளையும் நேரத்தையும் உபயோகப்படுத்துகிறான். வெகு விரைவில், அவனை அத்தொழில்சாலை கொள்ளமுடியாத விதத்தில் அவன் மனம் மாறுதலை அடைகின்றது. அது அவனது மனநிலைக்கு ஒத்துவராமல் தூர எறியப்படும் ஒரு வஸ்திரத்தையொத்து அவன் வாழ்க்கைக்குப் புறத்தில் விழுகிறது; அவனது விரிகின்ற சக்திகளின் அளவுக்குத் தக்கபடி அவன் சந்தர்ப்பங்கள் வளர்தலினால், அவன் அத்தொழில்சாலையை விட்டு ஸ்திரமாக விலகிவிடுகிறான். சில வருஷங்களுக்குப் பின்னர் இந்தப் பாலியனை வயது நிரம்பிய ஒரு மனிதனைப் பார்க்கிறோம். மனத்தின் சில சக்திகளுக்கு எஜமானாகி, அவற்றை அவன் மிக்க செல்வாக்குடனும் நிகரற்ற வல்லமையுடனும் பிரயோகிக்க நாம் பார்க்கிறோம். அவனது கைகளில் மிகப் பெரிய பொறுப்புகளின் கயிறுகளைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்; ஆ! மனிதர்கள் அவன் பேச்சைக் கேட்டு மாறுதல் அடைகிறார்கள்; புருஷர்களும் ஸ்திரீகளும் அவனது மொழிகளைக் கடைப்பிடித்துத் தங்கள் ஒழுக்கங்களைச் சீர்திருத்துகிறார்கள்; அவனைச் சூரியனைப் போன்று நிலைப்பும் ஒளியுமுள்ள மத்தியப் பொருளாக வைத்து, எண்ணிறந்த மனிதர்களின் கதிகள் சுற்றிவருகின்றன. அவனுக்குப் பாலியத்தில் தோன்றிய மனக்காட்சியைப் பிரத்தியக்ஷமாக அநுபவித்து

விட்டான். அவன் தனது மனோஇலக்ஷியத்தோடு ஐக்கியமாகிவிட்டான்.

வாசிக்கிறவர்களே! நீங்களும் உங்கள் ஹிருதயத்தில் காணும் காட்சி—சோம்பலால் எழும் விருப்பம் அன்று—மேன்மையதாக இருப்பினும், கீழதாக இருப்பினும் அல்லது அவ்விரண்டின் கலப்பதாக இருப்பினும் அதனைப் பிரத்தியக்ஷத்தில் அநுபவிப்பீர்கள்; ஏனெனின், நீங்கள் எதனை அந்தரங்கமாகவும் தலைமையாகவும் நேசிக்கிறீர்களோ, அதனிடத்திற்கு இழுக்கப்படுவீர்கள். உங்கள் சொந்த நினைப்புகளின் சரியான பலன்கள் உங்கள் கைகளில் கொடுக்கப்படும். நீங்கள் எதனைப் பெறத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறீர்களோ அதனைப் பெறுவீர்கள்; கூடவோ குறையவோ பெறமாட்டீர்கள். உங்கள் தற்காலப் புறநிலைமை எதுவாயினும் சரி, நீங்கள் உங்கள் நினைப்புகளுடனும் உங்கள் மனத்தின் காட்சியுடனும் உங்கள் மனோஇலக்ஷியத்துடனும் உயர்வீர்கள், தாழ்வீர்கள் அல்லது இருந்தபடி இருப்பீர்கள். உங்களை ஆட்சிபுரியும் அவா எவ்வளவு சிறியதாக இருக்கிறதோ அவ்வளவு சிறியர் ஆவீர்கள்; உங்களுக்குள் பிரதானமாக இருக்கும் விருப்பம் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவு பெரியர் ஆவீர்கள். ஸ்டாண்டன் கிர்க்காம் டேவிஸ் என்பவர் சொன்னபிரகாரம் "நீங்கள் கணக்குகள் எழுதிக்கொண்டிருக்கலாம்; திடீரென எழுந்து உங்கள் மனோ இலக்ஷியங்களுக்குத் தடையாக நீடித்தகாலம் உங்களுக்குத் தோன்றிக்கொண்டுவந்த கதவினைக் கடந்து நடப்பீர்கள்; அவ்விடத்தில் உங்கள் பிரசங்கத்தைக் கேட்ப

தற்குத் தயாராக இருக்கும் அநேகரைக் காண்பீர்கள்—இன்னமும் எழுதுகோல் உங்கள் காதிலும், உங்கள் விரல்களில் மைப்படிந்த அழுக்கும் இருக்கலாம்—அப்பொழுது உங்கள் ஆன்ம ஞானத்தைத் தாரை தாரையாகப் பொழிவீர்கள். நீங்கள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கலாம்; நீங்கள் ஆடுமேய்க்கும் சத்தத்துடனும் திறந்த வாயுடனும் நகரத்துக்குச் செல்வீர்கள்; நீங்கள் ஆன்மாவினால் துணிகரமாக நடத்தப்பட்டு, சித்திரம் எழுதும் ஆசிரியன் வேலை ஸ்தலத்துக்குள் போய்ச்சேர்வீர்கள்; அவர் சில நாட்களுக்குப் பின்னர் "நான் இனிமேல் உங்களுக்குக் கற்பிக்கவேண்டுவது ஒன்றுமில்லை." என்று கூறுவார். சமீபகாலத்தில் ஆடுகளை ஓட்டிக்கொண்டிருக்கும்பொழுது பெருங்காரியங்களை மனத்தில் கண்டுகொண்டிருந்த நீங்கள் இப்பொழுது ஆசிரியர்களாகி விட்டீர்கள். நீங்கள் இவ்வுலகத்தைச் சீர்ப்படுத்துவதற்காக உங்கள் வாளையும் சீவுளியையும் கீழேவைப்பீர்கள்."

நினைப்பிலியும் மடையனும் மடியனும் பொருள்களைப் பார்க்காது, பொருள்களின் வெளிப்படையான காரியங்களை மட்டும் பார்த்து, யோகம், அதிர்ஷ்டம், காலம்-இவற்றைப்பற்றிப் பேசுகின்றனர். ஒருவன் பணக்காரனாவதைப் பார்த்து "இவன் எவ்வளவு யோக சாலி!" என்று கூறுகின்றனர். மற்றொருவன் புத்திசாலியாவதைப் பார்த்து "இவன் எவ்வளவு உயர்ந்த அதிர்ஷ்டம் பெற்றிருக்கிறான்!" என்று ஆச்சரியம் அடைகின்றனர். இன்னொருவனது தூய குணத்தையும் விரிந்த செல்வாக்கையும் பார்த்து "இவனுக்குக் காலம் ஒவ்வொரு வழியிலும் எப்படி உதவி

புரிகிறது!" என்கின்றனர். அவர் இவர்கள் தங்கள் அநுபவங்களைப் பெறுதற்கு மனதாரப்பட்டிருக்கிற கஷ்டங்களையும் தவறுதல்களையும் போராட்டங்களையும் பார்க்கின்றிலர்; இவர்களது ஹிருதயத்தின் காட்சியைப் பிரத்தியக்ஷத்தில் கொண்டு வருதற்கும், இவர்களுடைய மார்க்கங்களில் கடக்க முடியாதனவாகத் தோன்றிய இடையூறுகளை நீக்குதற்கும் இவர்கள் செய்திருக்கிற பரித்தியாகங்களையும் இவர்கள் எடுத்திருக்கிற துணிகரமான முயற்சிகளையும் இவர்கள் உடைத்தாயிருந்த நம்பிக்கையையும் பற்றிய அறிவு அவருக்கு இல்லை. அவரது கஷ்டங்களையும் மனவருத்தங்களையும் அறிகின்றிலர்; ஆனால், சுகத்தையும் சந்தோஷத்தையுமட்டும் பார்த்து "அதிர்ஷ்டம்" என்று கூறுகின்றனர்: அவரது நீண்ட பிரயாசையான யாத்திரையைப் பார்க்கின்றிலர்; ஆனால், சென்று சேர்ந்திருக்கும் இடத்தைமட்டும் பார்த்து, அதனை "நல்ல அதிர்ஷ்டம்" என்று சொல்கின்றனர்: அவர் செய்த வேலையைக் கவனிக்கின்றிலர்; செய்து பெற்ற பொருளைமாத்திரம் பார்த்து அதனை "நல்ல காலம்" என்கின்றனர்.

மனிதரது சகல காரியங்களிலும் முயற்சிகளும் இருக்கின்றன; பலன்களும் இருக்கின்றன; முயற்சிக்குத் தக்கபடி பலன் கிடைக்கின்றது. காலம் என்பது ஒன்றில்லை. தெய்வீகப்பேறுகளும், சக்திகளும் உலகஉடைமைகளும், அறிவு உடைமைகளும், மோக்ஷஉடைமைகளும் முயற்சியின் பலன்கள்; அவைகள் முற்றுப்பெற்ற நினைப்புகள்; செய்துமுடித்த காரியங்கள்; அநுபவிக்கப்பட்ட மனக்காட்சிகள்.

உங்கள் மனத்தில் நீங்கள் மேன்மையாக வைத்திருக்கிற காட்சி, உங்கள் ஹிருதய சிம்மாசனத்தில் நீங்கள் வைத்திருக்கும் இலக்ஷியம்—இதனால் உங்கள் வாழ்க்கையைக் கட்டிக்கொள்வீர்கள்; இது நீங்கள் ஆவீர்கள்.

# சாந்தம்.

மனத்தின் அமைதி ஞானத்தின் அழகிய மணிகளில் ஒன்று. அது தன்னை யடக்குதலில் நீடித்துப் பொறுமையோடு செய்த முயற்சியின் பலன். அது உளதாதல் முதிர்ந்த அநுபவத்தையும், நினைப்பின் நியதியையும் செயல்களையும் மிகநன்குணர்ந்த அறிவையும் காட்டும் ஓர் குறி.

மனிதன் தன்னை நினைப்பிலிருந்து வளரும் ஜீவன் என்று எவ்வளவுக்கு எவ்வளவு அறிகிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அமைதியை அடைகிறான்; ஏனெனின், அவ்வறிவு மற்றவரும் நினைப்பின் பலனாக உண்டாயிருக்கின்றனர் என்று தெரிவதை அவசியமாக்கும்; அவன் சரியாகஅறிதலை விர்த்திசெய்வதனாலும், காரணகாரியச் செயலால் அகத்தின் காரியங்களது சம்பந்தங்களை அதிகத் தெளிவாகப் பார்ப்பதினாலும் சந்தடிசெய்து கூச்சலிடுவதையும் தொந்தரைப்பட்டுத் துக்கமுறுதலையும் விட்டு, நிதானமாகவும் ஸ்திரமாகவும் சாந்தமாகவும் இருக்கிறான்.

அமைதியுள்ள மனிதன் தன்னை எப்படி அடக்கியாள்வது என்பதைக் கற்றிருக்கிறபடியால் மற்றவர்களுக்குத் தக்கவாறு தன்னைப் பொருத்திக்கொள்ள அறிகிறான்; அவர்களோ அவன் ஆன்மபலத்தை மதித்து அவனிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் என்றும், அவன்மீது நம்பிக்கை வைக்கலாம் என்றும் உணர்கிறார்கள். ஒருவன் எவ்வளவுக்கு அதிகமாக அமைதியுள்ளவன் ஆகிறானோ, அவ்வளவுக்கு அவனது காரியசித்தியும் செல்வாக்கும் நன்மைசெய்யும்

சக்தியும் அதிகரிக்கின்றன. சாதாரண வியாபாரியும் கூடத் தன்னை யடக்குவதிலும் தன்னைச் சமநிலையில் வைத்துக்கொள்வதிலும் அதிகமாக வளரும்தோறும் அவனது வியாபாரம் விர்த்தியாகிக்கொண்டுவரக் காண்பான்; ஏனெனின், ஜனங்கள் எவன் நடக்கை சாந்தத்துடன் கூடியிருக்கிறதோ, அவனுடன்தான் கொடுக்கல் வாங்கல் செய்தற்குப் பிரியப்படுவார்கள்.

திடச்சித்தமுள்ள அமைதியான மனிதன் பிறரால் எப்பொழுதும் நேசிக்கவும் மதிக்கவும் படுகிறான். அவன் ஒரு பாலைவனத்தில் நிழலைக் கொடுக்கும் மரத்துக்குச் சமானமாகவும் ஒரு சூறைக்காற்றில் தங்குதற்கு இடங்கொடுக்கும் ஒரு மலைக்குச் சமானமாகவும் இருக்கிறான். யார்தாம் ஒரு அமைதியுள்ள ஹிருதயத்தையும் இனிமையான சுபாவத்தோடு கூடிய சமத்துவநிலையுள்ள வாழ்க்கையையும் விரும்பாதவர்? இந்நற்குணங்களைக் கொண்டவர்களுக்கு மழைபெய்தாலும் வெயிலடித்தாலும் அல்லது வேறு எவ்வித மாறுதல்கள் நேர்ந்தாலும் ஒன்றுமில்லை; ஏனெனில், அவர்கள் எக்காலத்தும் இனிமையுள்ளவர்களாகவும் சாந்தமும் அமைதியு முள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நாம் சாந்தம் என்று கூறும் அந்த மேம்பாடான சமசித்தமுள்ள ஒழுக்கம் கல்வியின் கடைசிப்பாடமாகும். அது வாழ்க்கையின் மலர்; ஆன்மாவின் கனி. அது ஞானத்தையொத்து விலை உயர்ந்தது; தங்கத்தைப் பார்க்கிலும்—ஆம், பத்தரைமாற்றுத் தங்கத்தைப் பார்க்கிலும்கூட—அதிகமாக விரும்பத்தக்கது. மெய்ப்பொருள் என்னும் சமுத்திரத்தில் அலைகளுக்குக் கீழாகப் புயல்கள்

அணுகக்கூடாத தூரத்தில் நித்தியஅமைதியில் வாழ்கிற ஒரு சாந்தமான வாழ்க்கையோடு பணம் சம்பாதித்தல் ஒன்றையே கொண்டுள்ள வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கின், பிந்தியது எவ்வளவு அற்பமாக இருக்கிறது!

"தமது வாழ்க்கைகளைக் கடியனவாகச் செய்கிறவரும், தமது வெடியையொத்த கோபச் சுபாவங்களால் இனிமையும் அழகும் பொருந்திய சகலவற்றையும் அழிக்கிறவரும், தமது சமசித்தநிலையைக் கெடுத்துப் பகைமையை ஆக்குகிறவருமான மனிதரில் எத்தனைபேரை நாம் பார்த்திருக்கிறோம்! மனிதரில் பெரும்பாலர் தன்னை யடக்கும் சக்தி இல்லாமல் தமது வாழ்நாட்களை நாசமாக்கித் தமது இன்பங்களைக் கெடுத்துக்கொள்ளவில்லையா என்பது ஒரு வினா. நல்ல நிதானநிலையில் இருப்பவரும், பூரணமான ஒழுக்கத்தின் இலக்ஷணமாகிய மேம்பாடான சமசித்த நிலையைக் கொண்டிருப்பவருமான மனிதரை எவ்வளவு சுருக்கமாகச் சந்திக்கிறோம்!"

ஆம்! மனிதவர்க்கம் அடக்கப்படாத காமாதி குணங்களினால் மேலும் கீழும் விழுகிறது; அடக்கப்படாத துக்கத்தினால் சந்தடிசெய்கிறது; கவலை, சந்தேகம் என்னும் காற்றினால் மோதப்படுகிறது. ஞானமடைந்த மனிதன்மட்டும்—தனது நினைப்புகளை அடக்கிப் பரிசுத்தப்படுத்திக்கொண்டவன்மட்டும்—ஆன்மாவின் காற்றுகளும் புயல்களும் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்துகொள்கிறான்.

புயல்காற்றில் அடிபட்டலையாநின்ற ஆன்மாக்களே! நீங்கள் எவ்விடத்தில் இருப்பினும், எத்தகைய நிலைமைகளில் வாழினும், இதனைத் தெரிந்து கொள்ளுங்கள்—வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் சுகம் என்னும் தீவுகள் புன்சிரிப்புச் செய்துகொண்டிருக்கின்றன; உங்களது மனோஇலக்ஷியம் என்னும் பிரகாசமுள்ளகரை உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. நினைப்பாகிய சுக்கானை உங்கள் கைகொண்டு பலமாகப் பிடியுங்கள். உங்கள் ஆன்மாவாகிய ஓடத்தில் அதனை நடத்துவோனாகிய மாலுமி சாய்ந்து படுத்திருக்கிறான்; அவன் உறக்கமாத்திரம் செய்கிறான்; அவனை எழுப்புங்கள். தன்னையடக்கல் பலம்; சரியானநினைப்பு ஆண்மை; அமைதி சக்தி. உங்கள் ஹிருதயத்தைப் பார்த்து "சாந்தி, சாந்தமாயிரு." என்று சொல்லுங்கள்.

முற்று